REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper

மின்னிதழ்
2024 ஓகஸ்ட் 3 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
92 1932–2024 ANNIVERSARY
தினகரன்

வரு. 92 இல. 184 | Saturday 03, August, 2024 | 12பக்கங்கள் | 50/-

## கொழும்பு, ஹுனுப்பிட்டிய



### கங்காராம விகாராதிபதி வண. ஞானிஸ்ஸர தேரர் காலமானார்

கொழும்பு, ஹுனுப்பிட்டிய கங்காராம விகாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய கலபொட ஞானிஸ்ஸர தேரர் நேற்று (02) தனது 81ஆவதுவயதில் 06

## யாழ். மக்களின் குடிநீர் தேவைக்கு முழுமையான தீர்வு

# 'யாழ். நதி நீர் திட்டம்' விரைவில் ஆரம்பம்





### "வடக்கில் யுத்தம் முடிந்து அபிவிருத்திக்கான யுத்தத்தை ஒற்றுமையாக ஆரம்பிப்போம்"

### "அடுத்த 5–10 வருடங்களில் வடக்கு அபிவிருத்தி அடைந்த மாகாணமாக மாற்றப்படும்"

வடக்கில் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 15 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. எனவே தற்போது அனைவரும் ஒன்றிணைந்து அபிவிருத்திக்கான யுத்தத்தை ஆரம்பிப்போமென தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் 5 - 10 வருடங்களில் வடக்கை அபிவிருத்தி அடைந்த மாகாணமாக மாற்றுவதே தமது நோக்கமாகுமெனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் – கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் தாளையடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று (02) முற்பகல் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நீர் வழங்கல் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படுமென தெரிவித்த ஜனாதிபதி, யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் திட்டம் மற்றும் 'யாழ்.நதி நீர் திட்டம்' மூலம் வடக்கின் குடிநீர் தேவைக்கு முழுமையான தீர்வை வழங்க முடியுமெனவும் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் தாளையடி கடல் நீரை நன்னீராக்கும் நிலையமானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி ஏற்பாடுகளின் கீழ் நடத்தப்படுகிறது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக இலங்கை அரசாங்கம் 2011ஆம் ஆண்டில் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் பிரான்ஸ் அபிவிருத்தி வங்கி (AFD) ஆகியவற்றின் உதவியுடன் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நீர் வழங்கல் 06

### அரசாங்க ஓய்வூதியக்காரர்களுக்கு

## செப்டெம்பர் முதல் 3,000 ரூபா இடைக்கால கொடுப்பனவு



இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

அரசாங்க சேவையில் அனைத்து ஓய்வூதியக்காரர்களுக்கும் தற்போது வழங்கப்படும் 2,500 ரூபா கொடுப்பனவுக்கு மேலதிகமாக 3,000 ரூபாவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதுடன் 06

### மத்திய கிழக்கில் மோதல் நிலை ஏற்பட்டால்

## இலங்கையரை பாதுகாப்பாக அழைத்து வர 5 மில்லியன் டொலர் அரசாங்கம் ஒதுக்கீடு



மத்திய கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலை காரணமாக இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் நாடு திரும்பும் கட்டாய நிலைக்கு தள்ளப்படுவார்களென, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஈரானில் ஹமாஸ் அமைப்பினது அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயில் ஹனியா படுகொலை செய்யப்பட்ட பின்னர் மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் யுத்த சூழ்நிலை தொடர்பாக நேற்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் ஊடகவியாளர் சந்திப்பு நடைபெற்றது. இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர், "ஜனாதிபதியின் பணிப்புரையின் 06

### மத்திய கிழக்கில் பதற்ற சூழ்நிலை

## அத்தியாவசிய தேவைகளை தவிர லெபனானுக்கு செல்ல வேண்டாம்

அமைச்சர் அலி சப்ரி அறிவுறுத்தல்



மத்திய கிழக்கில் தற்போது நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக அத்தியாவசிய தேவைகளை தவிர லெபனானுக்கு செல்வதை தவிர்க்குமாறு இலங்கையருக்கு வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி அறிவுறுத்தினார்.

மத்திய கிழக்கில் நிலவும் பதற்ற நிலைமை தொடர்ந்தால் அதனை எதிர்கொள்வது தொடர்பாக முன்கூட்டிய தயார் நிலைக்காக 06

## மர்ஜான் பளீல் எம்.பி.யின் அழைப்பில் தர்கா நகருக்கு அமைச்சர் பந்துல விஜயம்



இன்று பல வீதிகள் திறப்பு

பொதுஜன பெரமுன கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் விசேட அழைப்பின் பேரில் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன இன்று தர்கா நகருக்கு விஜயம் செய்கிறார்.

பேருவளை பிரதேச சபைக்குட்பட்ட தர்கா நகரில் பிரதான நான்கு வீதிகள் பல கோடி ரூபா செலவில் கார்ப்பட் இடப்பட்டுள்ளன. நிகழ்வில் அமைச்சர் 06


## புதிய அம்சம் கொண்டதாக 3 நிறங்களில் கடவுச்சீட்டு



ஒக்டோபர் முதல் வழங்க ஏற்பாடு

புதிய அம்சங்களை கொண்ட கடவுச்சீட்டு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் வழங்கப்படுமென, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். இதற்கமைய சாதாரண, உத்தியோகபூர்வ மற்றும் இராஜதந்திர 06

## கிழங்கு, வெங்காயம், கௌப்பி; சதொசவால் விலை குறைப்பு



அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகளை லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது. இந்த விலை குறைப்பின்படி ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கின் மொத்த விலை 35 ரூபாவால் குறைக்கப்பட்டு 240 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும். 1,020 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் வெள்ளை கௌப்பி 998 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும். 06

## மட்டு. நகரில் உலக தமிழ் கலை இலக்கிய மாநாடு



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பங்களிப்புடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் உலக தமிழ் கலை இலக்கிய மாநாடு மட்டக்களப்பில் நேற்று (02) ஆரம்பமானது. மாநாட்டின் ஆரம்ப நிகழ்வாக கல்லடியில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையை ஆளுநர் செந்தில் தொண்டமான், மலேசியா பாராளுமன்ற உறுப்பினர் டத்தோ சரவணன் ஆகியோர் திரைநீக்கம் செய்து வைத்த பின்னர் பிடிக்கப்பட்ட படம்.

## வடக்கிலிருந்து தமிழ் இளைஞர்ளை கட்சிக்குள் ஈர்க்க SLPP எதிர்பார்ப்பு

நாமல் எம்.பி. நம்பிக்கை வெளியீடு



எதிர்காலத்தில் வடக்கிலிருந்து தமிழ் இளைஞர் ஒருவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவம் செய்வதை எதிர்பார்ப்பதாக, அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இப்போதும் தமிழ்ச் சமூகத்திலுள்ள இள வயதினருடன் தனது கட்சி 06

### மருத்துவ உலகில் புதிய சாதனை

## மனிதனுக்கு இயந்திர இருதயம் பொருத்திய மருத்துவர்கள்



இருதய நோயாளிகளுக்கு செயற்கை இருதய மாற்று அறுவை சிகிச்சையில் டெக்சாஸ் ஹார்ட் இன்ஸ்டிடியூட் (Texas Heart Institute) விஞ்ஞானிகள் மருத்துவ உலகில் புதிய சாதனை படைத்துள்ளனர்.

'டைட்டானியம் கட்டமைக்கப்பட்ட' இருதயத்தை பயன்படுத்தி உள் வைப்பை மேற்கொண்டு மனிதனுக்கு பொருத்தியுள்ளனர். 06




92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# தாளையடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் ஜனாதிபதியால் வைபவரீதியாக திறப்பு












# யாழ்.மாவட்ட இளைஞர்களுடன் ஜனாதிபதி சந்திப்பு









தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஓகஸ்ட் 3 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.44
 லுஹர் - 12.18
அஸர் - 03.39
மஃரிப் - 06.31
இஷா - 07.44

**இன்றைய சுபதினம்**

குரோதி வருடம் ஆடி 18

ராகுகாலம் : காலை : 9.04 - 10.34வரை
சுபநேரம் : மாலை : 3.04 - 4.34வரை

யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



குறுகிய காலத்தில் பொருளாதார அபிவிருத்தி

# ஜனாதிபதி ரணில் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு IMF பாராட்டு

குறுகிய காலத்தில் நாட்டை ஸ்திரப்படுத்தி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ள நடவடிக்கைகள் சர்வதேச நாணய நிதியத்தின் பாராட்டை பெற்றுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர்கள் இதனை தெரிவித்துள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க,



“மூன்றாவது பரிசீலனையை இடையூறின்றி நிறைவு செய்வதற்கான வேலைத்திட்டம் தொடர்பாக கலந்துரையாடினோம். அதன் மூலம் நான்காவது தவணையை தாமதமின்றி பெற்றுக்கொள்ளலாம். எங்களுக்கு இது மிகவும் முக்கியமானது. நான்காவது தவணை வெளியீடு ஏதேனும் ஒரு காரணத்தால் தாமதமானால் நாட்டின் பொருளாதார நிலை தொடர்பாக சில எதிர்மறையான தாக்கங்கள் ஏற்படும்.


2023 இன் முதல் பாதியில் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தின் கீழ் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் நீடிக்கப்பட்ட வசதி இலங்கைக்கு அங்கீகரிக்கப்பட்டது. அதன் முதல் தவணை மார்ச் 2023 இல் அங்கீகரிக்கப்பட்டது. பின்னர் இரண்டாம் தவணை டிசெம்பர் மாதமும் மூன்றாம் தவணை கடந்த ஜூன் மாதமும் பெறப்பட்டது. இதனால் இலங்கைக்கு தற்போது ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கிடைத்துள்ளது.

அத்துடன் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்பட்ட கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பாக இலங்கை வெற்றிகரமாக உடன்பாட்டை எட்டியுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் தெரிவித்தார்.

## தினகரன் 92 வருடங்களுக்கு முன்

**தினகரன்**

**இன்று 03 ஓகஸ்ட் 1932**



மார்க்கெட் பிரச்னை

கிராம விளை பொருள் விற்பனைக்கு உதவி

விவசாயத்தின் மிக முக்கிய பிரச்னையாக விளங்குவது, கிராமப் பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் பொருட்களை விற்பதற்குத் தகுந்த மார்க்கெட்டு முறைகளைக் கண்டுபிடித்தலேயாகும். இவ்விஷயத்தைக் குறித்து ஆராய்வதில், விவசாய டைரெக்டர் மிக்க கவனஞ் செலுத்திவருவதாகத் தெரிகிறது.

### மார்க்கெட் பிரச்னை

**கிராம விளை பொருள் விற்பனைக்கு உதவி**

விவசாயத்தின் மிக முக்கிய பிரச்னையாக விளங்குவது, கிராமப் பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் பொருட்களை விற்பதற்குத் தகுந்த மார்க்கெட்டு முறைகளைக் கண்டுபிடித்தலேயாகும். இவ்விஷயத்தைக் குறித்து ஆராய்வதில், விவசாய டைரெக்டெம் மிக்க கவனஞ் செலுத்தி வருவதாகத் தெரிகிறது.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**

## நிகழ்நிலை காப்பு சட்ட திருத்தம்; அரச வர்த்தமானியில் பிரசுரம்

2024ஆம் ஆண்டின் நிகழ்நிலை காப்புச் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிகழ்நிலை காப்பு திருத்தச் சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதற்கமைய நிகழ்நிலை காப்பு திருத்தச் சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## சபாநாயகருடன் சமூக சிற்பிகள் சங்க மாணவர் கலந்துரையாடல்



சமூக சிற்பிகள் சங்கத்தின் மாணவ, மாணவிகள் சிலர் அண்மையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை பாராளுமன்றத்தில் சந்தித்து கலந்துரையாடினர். இந்த சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

சமூக சிற்பிகள் சங்கத்தால் 'ஜனநாயகத்தின் ஆரம்பம்' எனும் தொனிப்பொருளில் சிறுவர் நிழல் பிரதேச சபைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையில் 10 மாவட்டங்களிலுள்ள 57 கிராமங்களின் 11 வயது முதல் 15 வயதுவரையான சிறுவர்கள் இந்த சிறுவர் நிழல் பிரதேச சபைகளில் உள்ளடங்குகின்றனர். இதுவரை 10 மாவட்டங்களில் 19 சிறுவர் நிழல் பிரதேச சபைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இங்கு வருகை தந்த மாணவ, மாணவிகளுக்கு தமது பிரதேசங்களில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் நேரடியாக சபாநாயகரிடம் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது. இதன்போது சபாநாயகர் அந்த சிக்கல்களுக்கு உடனடியாக தீர்வு வழங்கியதுடன், சிக்கல்களை ஆராய்ந்து தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு முன்வைப்பதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

அத்துடன் பாராளுமன்ற முறைமை தொடர்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, மாணவர்களுக்கு இதன்போது தெளிவுபடுத்தினார்.

இங்கு கலந்துகொண்ட மாணவ, மாணவிகள் பாராளுமன்றத்தை பார்வையிட்டதுடன், இந்த சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரும் தொடர்பாடல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளருமான எம்.ஜயலத் பெரேரா, சமூக சிற்பிகள் சங்கத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினர் கலந்துகொண்டனர்.

## 2025ஆம் ஆண்டு விடுமுறைகள்; அரச வர்த்தமானி வெளியீடு

2025ஆம் ஆண்டுக்கான பொது மற்றும் வங்கி விடுமுறையின் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.



அரசாங்கம் அழுத்தம் கொடுத்து

## மாவின் விலையை குறைத்தால் பாணை 100 ரூபாவுக்கு விற்கலாம்

கோதுமை மா விலையை குறைக்க அரசாங்கம் அழுத்தம் கொடுத்தால் 100 ரூபாவுக்கு பாண் விற்பனை செய்ய முடியுமென, அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

ஒரு இறாத்தல் பாணை 130 ரூபாவுக்கு விற்பனை செய்வது நடைமுறை சாத்தியமற்றதெனவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவித்த போது, 450 கிராம் கொண்ட ஒரு இறாத்தல் பாண் 130 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டுமென நுகர்வோர் அதிகார சபை அண்மையில் அறிவித்தது. தற்போது பாண் நியாயமான விலைக்கு விற்பனை செய்யப்படுகிறதா என்பதை கண்டறிய நாடு முழுதும் சோதனை நடத்தப்படுகிறது. இதனால் பேக்கரி உரிமையாளர்கள் உரிய நிறையில் பாணை உற்பத்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாகவும் குறிப்பிட்டார்.




அத்துடன் கோதுமை மா விலையை குறைக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அரசாங்கம் அழுத்தம் கொடுத்தால் பாணை 100 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

இந்த தருணத்தில் பேக்கரி உரிமையாளர்களை இலக்கு வைக்காது, கோதுமை மா விலையை குறைப்பதே அரசாங்கம் செய்ய வேண்டியதெனவும், அவர் தெரிவித்தார்.

கோதுமை மா விலையை கணிசமானளவு குறைக்க முடியுமெனவும், அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத் தலைவர் என்.கே.ஜயவர்தன சுட்டிக்காட்டினார்.

## இருபது கிலோ கஞ்சாவுடன் யாழில் இளைஞர் கைது



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், செம்மணி பகுதியில் கஞ்சா போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவரிடமிருந்து 20 கிலோ 175 கிராம் கஞ்சா போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

06

செப்டெம்பர் முதல் தொடர்ந்து

## சென்னை – பலாலிக்கிடையே இண்டிகோ விமான சேவை

**ஆசன முன்பதிவு ஓகஸ்ட் 01 முதல் ஆரம்பம்**



குறைந்த கட்டணத்தில் விமானப் பயணத்தை மேற்கொள்ளக்கூடிய வசதி கொண்ட இந்திய நிறுவனமான இண்டிகோ, அதன் சர்வதேச வழித்தட வலையமைப்பில் யாழ். பலாலிக்கு புதிதாக மேலதிக விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் சென்னைக்கும் யாழ். பலாலிக்குமிடையே தொடர்ந்து நாளாந்தம் விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாக, அந்த விமான நிறுவனம் தெரிவித்தது.

இண்டிகோ விமான நிறுவனத்தின் விமான சேவையில் இலங்கையில் கொழும்புக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடமாக யாழ். பலாலி விமான நிலையம் அமைந்துள்ளதுடன், சர்வதேச விமான சேவையில் இது 34ஆவது இடத்தை பெற்றுள்ளது.

விமானப் பயணத்துக்கான முன்பதிவு நேற்று முன்தினம் முதலாம் திகதி ஆரம்பமாகியது. இண்டிகோ விமான நிறுவனத்தின் இணையத்தளமான www.goIndiGo.in அல்லது விமான நிறுவனத்தின் Mobile App மூலம் வாடிக்கையாளர்கள் பயண சீட்டுக்களுக்கான முன்பதிவுகளை மேற்கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவசேனா மாநில செயல் தலைவர்

## ஸ்ரீமயூராபதி அம்மன் கோயில் திருவிழாவில் பங்கேற்கிறார்



ஸ்ரீ மயூராபதி பத்திரகாளியம்மன் கோயில் வருடாந்த திருவிழாவின் பாற்குட பவனி விழாவில் கலந்துகொள்வதற்காக தமிழ்நாட்டு சிவசேனா மாநில செயல் தலைவர் க.சசிகுமார் இம்மாதம் 7ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

சுவாமி விவேகானந்தரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு R.S.S இல் இணைந்து சமுதாய பணிகள் செய்து வருவதுடன், கடந்த 25 ஆண்டுகளாக சிவசேனாவிலிருந்து கல்விக்கு முக்கியத்துவம் வழங்கி பல மாணவர்களுக்கு இலவச கல்வி மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கினார். பல சிவாலயங்களில் திருப்பணி செய்து குடமுழுக்கும் இவர் செய்துள்ளார்.

அத்துடன் கடந்த 2023ஆம் ஆண்டில் இலங்கையில் தீபாவளிக்கு 3,000 குடும்பங்களுக்கு வேஷ்டி, சட்டை, புடைவைகளை இவர் வழங்கியுள்ளார்.

வாழ்நாள் முழுவதும் மக்களுக்கு சேவை செய்வதே இவரின் குறிக்கோளாககொண்டுசெயற்படுகிறார்.

## அபினவ் ரட்னதுரையின் மிருதங்க அரங்கேற்றம்



வாய்பாட்டு குரு கலாநிதி ஆரூரன் அருனந்தி மற்றும் மிருதங்க குரு நவயுக நந்தி கலாநிதி பத்ரி சதீஷ்குமார் (இந்தியா) ஆகியோரின் மாணவர் அபினவ் ரட்னதுரையின் வாய்பாட்டு மற்றும் மிருதங்க அரங்கேற்றம் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறும்.

இலங்கையின் புகழ்பூத்த தபேலா இசைக் கலைஞர் ரட்னம் ரட்னதுரை மற்றும் பிரியதர்ஷனி ரட்னதுரை தம்பதியரின் புதல்வர் அபினவ் ரட்னதுரையாவார்.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மூத்த ஒலிபரப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் மற்றும் கௌரவ அதிதியாக நாட்டிய கலா மந்திர் நிறுவுனர் கலாசூரி ஸ்ரீமதி. வாசுகி ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

## இந்திய கடற்படை நீர்மூழ்கி கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு வருகை



இந்திய கடற்படைக்கு சொந்தமான நீர்மூழ்கிக் கப்பல் உத்தியோகபூர்வமாக நேற்று காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததுடன், கடற்படை சம்பிரதாயத்துக்கமைய நீர்மூழ்கிக் கப்பல் இலங்கை கடற்படையினரால் வரவேற்கப்பட்டது.

'ஐ.என்.எஸ். ஷல்கி' (Shalki) என்று பெயரிடப்பட்ட இந்த நீர்மூழ்கிக் கப்பல் 64.4 மீற்றர் நீளம் கொண்டது. 40 கடற்படையினரை கொண்டுள்ளது. நீர்மூழ்கிக் கப்பல் இங்கிருக்கும் காலப்பகுதியில் இலங்கை கடற்படையினர் இதன் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்கவுள்ளனர்.

நீர்மூழ்கிக் கப்பல் நாட்டின் சில பகுதிகளுக்குச் சென்று முக்கிய இடங்களை பார்வையிட உள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நீர்மூழ்கிக் கப்பல் நாளை (04) இங்கிருந்து செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செவ்விளநீர் மரங்களை தாக்கும் வெள்ளை ஈக்களின் ஆக்கிரமிப்பு

தெங்கு மற்றும் செவ்விளநீர் உற்பத்திகளில் பரவி வரும் வெள்ளை ஈ பூச்சிகளை கட்டுப்படுத்துவதற்காக விவசாயத் திணைக்களத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட என்கார்சிஸ் குவாடலூபே (Encarcis Guadeloupae) அடங்கிய 3 இலட்சம் பொதிகள் இவ்வருடம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக, தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்தளது.

வெள்ளை ஈ தாக்கத்தால் ஏற்பட்ட சேதம் தற்போது மேல் மாகாணம் மற்றும் வேறு சில பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக ஓரளவு குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



வெள்ளை ஈ மஞ்சள் நிறத்தில் அதிகம் ஈர்க்கப்படுவதால், தென்னையை விட செவ்விளநீர் உற்பத்திகளுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்துகிறது.

வெள்ளை ஈ தாக்கத்தால் சேதத்துக்குள்ளான 1,051,323 தென்னை மற்றும் செவ்விளநீர் மரங்கள் பாதுகாக்கப்பட்டிருப்பதாகவும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்தது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 18ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 27

### குறள் தரும் சிந்தனை



பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு

உயர்ந்த நிலை வரும்போது அடக்க உணர்வும், அந்த நிலை மாறிவிட்ட சூழலில் யாருக்கும் அடிமையாக அடங்கி நடக்காத மான உணர்வும் வேண்டும்.

# பாடசாலை மாணவர்களுக்கு நன்மை அளிக்கும் சுரக்ஷா காப்புறுதி திட்டம்

இலங்கை சுமார் 42 இலட்சம் மாணவர்களைக் கொண்டிருக்கிறது. அவர்கள் அரசாங்க, அரச அனுசரனை பெறும் மற்றும் தனியார் பாடசாலைகளிலும் பிரிவெனாக்களிலும், விஷேட பாடசாலைகளிலும் கல்வி கற்கின்றனர். இலவசக் கல்விக்கொள்கையின் ஊடாக முற்றிலும் இலவசமாக இந்நாட்டு மாணவர்களுக்கு கல்வி பெற்றுக்கொடுக்கப்படுகிறது. இவர்களுக்கு கல்வி கற்பிக்கவென மாத்திரம் இரண்டு இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். அத்தோடு இந்த இலவசக கல்விக் கொள்கையை வெற்றிகரமாக முன்னெடுக்கவென வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக வருடா வருடம் பெருந்தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. விசால உட்கட்டமைப்பு வசதிகளையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது இந்நாட்டின் கல்வித்துறை.

ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்வி வரையிலும் முற்றிலும் இலவசமாகவே இங்கு பெற்றுக்கொடுக்கப்படுகிறது. அத்தோடு மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டமும் நடைமுறையில் இருக்கின்றன.

இவ்வாறு இந்நாட்டு மாணவர்களை கல்வியின் ஊடாக முன்னிலைக்கு கொண்ட வரவென பல்வேறு திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் சுரக்ஷா மாணவர் காப்புறுதித் திட்டமும் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட யோசனைக்கு அமைய இத்திட்டம் நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் கொவிட் 19 பெருந்தொற்று மற்றும் பொருளாதார வீழ்ச்சி என்பன காரணமாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்படாத நிலை ஏற்பட்டிருந்தது. அதேபோன்று நாட்டில் 171 பாரிய அபிவிருத்தி திட்டங்களும் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

குறிப்பாக 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி, நாட்டை வங்குரோத்து நிலைக்கு வித்திட்டது. அந்த சூழலில் நாட்டின் தலைமையைப் பொறுப்பெடுத்து பொருளாதார ரீதியில் நாட்டை மீளக் கட்டியெழுப்ப எவரும் முன்வராத நிலை ஏற்பட்டது. அந்த சமயத்தில் நாட்டினதும் மக்களிதும் நலன்களை முன்னிலைப்படுத்தி நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பொருளாதார வேலைத்திட்டங்களை விரிவான அடிப்படையில் ஆரம்பித்தார். அவ் வேலைத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதி முதல் நாட்டுக்கும் மக்களுக்கும் பயனளிக்கத் தொடங்கின. இதன் விளைவாக பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் நாட்டில் நிலவிய நெருக்கடிகளும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நீங்கி மறுமலர்ச்சி பாதையில் நாடு பிரவேசிக்கலாயிற்று. அதன் பிரதிபலன்களும் மக்களைச் சென்றடையத் தொடங்கிவிட்டன.

இவ்வாறான சூழலில் ஏற்கனவே தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள 171 திட்டங்களையும் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 58 திட்டங்களை இவ்வருட நிறைவுக்குள் பூர்த்தி செய்யவும் திட்டமிட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டிருக்கிறார்.

அதேநேரம், கல்வியின் ஊடாக நாட்டில் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சுரக்ஷா மாணவர் காப்புறுதித் திடடத்தையும் மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வர நடவடிக்கைகைகளை மேற்கொண்டுள்ளார். அதற்கேற்ப கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த நேற்று முன்தினம் முதல் இத்திட்டத்தை தொடக்கி வைத்துள்ளார்.

நாட்டின் அனைத்து மாணவர்களுக்கும் நன்மை அளிக்கும் வகையிலான காப்புறுதித் திட்டமே இது. இத்திட்டம் குறித்த உடன்படிக்கையில் கல்வி அமைச்சின் செயலாளர் திலக்கா ஜயசுந்தரவும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பிரியந்த பெரேராவும் கையெழுத்திட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் மாணவர் ஒருவர் ஏதாவது நோய்க்கு உள்ளானால் அவர் அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் தங்கியிருந்தும் வெளிநோயாளர் பிரிவுகளிலும் சிகிச்சை பெற்றுக்கொள்ள வசதி அளிக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்திற்கென 7212 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒரு மாணவர் மூன்று வருட காலப்பகுதிக்கு நன்மை பெறும் வகையில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ள இக்காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஏதாவது நோய்களுக்கு உள்ளாகும் மாணவர்கள் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்காக மூன்று இலட்சம் ரூபாவும், வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெறவென இருபதினாயிரம் ரூபாவும், பாரதூர நோய்களுக்கு சிகிச்சை பெறவென 1,500,000 ரூபாவும் கொடுப்பனவாக பெற்றுக்கொடுக்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் விபத்து காப்புறுதி, ஆயுள் காப்புறுதி என்பனவும் மாணவர்களுக்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ள இக்காப்புறுதி திட்டம் இந்நாட்டின் இளம்பராயத்தினருக்கு பாரிய வரப்பிரசாதமாகும். அதனால் இத்திட்டத்தின் மூலம் உச்ச பலனைப் பெற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பாக இத்திட்டம் வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு பாரிய நிவாரணமாகவும் ஆறுதலாகவும் அமையும். அதுவே மக்களின் அபிப்பிராயமும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# கல்முனை ஆதார வைத்தியசாலையில் அளப்பரிய பணியாற்றும் என்பு முறிவு நெரிவு சிகிச்சைப் பிரிவு

கல்முனை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் என்பு முறிவு நெரிவு பிரிவு( orthopetic unit ) கடந்த காலங்களை விட மிகவும் சிறப்பாக பல வசதிகளுடன் இயங்கி வருகின்றது.

'சி' ஆம் (C Arm) என்று சொல்லப்படுகிற நவீனரக எக்ஸ் கதிர் கருவியுடன் சிறப்பாக சத்திர சிகிச்சைகள் இடம் பெற்று வருகின்றன.

பிரபல என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பத்திநாதன் கலாவேந்தன் தலைமையிலான குழுவினர் வார்ட்டில் இயங்கி வருகின்றார்கள்.





அங்கு ஆண்கள், பெண்களுக்கு என்று தனியான சத்திரசிகிச்சைக் கூடம் 24 மணிநேரமும் தயார் நிலையில் இருக்கின்றது. அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் எங்குமில்லாத சிற்றி நவீன எக்ஸ் கதிர் இயந்திரமும் உள்ளது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இரா .முரளீஸ்வரனின் முழு முயற்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த என்புமுறிவு நெரிவு சிகிச்சைப் பிரிவு இன்றைய பணிப்பாளர் டொக்டர் ரங்கா சந்திரசேகரவின் வழிகாட்டலில் மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது.

தற்போது பணிப்பாளருக்காக பதில் கடமை புரியும் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ் ராஜேந்திரனிடம் இது தொடர்பாக நேரில் சென்று வினவிய போது அவர் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:

தற்போது என்பு முறிவு நெரிவுப் பிரிவு பல நவீன உபகரணங்களுடன் அளப்பரிய சேவைகளை அங்கு செய்து வருகின்றது. எங்களுக்கு கிடைத்த ஒரு மாபெரும் சொத்து என்பு முறிவு வைத்திய நிபுணர் டொக்டர் கலாவேந்தன் அவர்கள். அங்கு வயதுவந்தோர் முதல் சிறுபிள்ளை வரை வளைபாத கிளினிக் மற்றும் ஏனைய கிளினிக்குகளை அவர் சிறப்பாக நடத்தி வருகின்றார்.

அர்ப்பணிப்பு நிறைந்த ஊழியர்களுடன் சத்திர சிகிச்சை கூடம் அங்கு தனியாக இயங்கி வருகின்றது. இதனால் அங்கு நோயாளிகளின் எண்ணிக்கை தினம் கூடி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. முன்னாள் பணிப்பாளர் டொக்டர் முரளீஸ்வரனின் பணி பாராட்டத்தக்கது. இன்றைய பணிப்பாளர் டொக்டர் ரங்கா சந்ரசேன அதனை தொடர்ந்து சிறப்பாக முன்னெடுத்து வருகிறார்."





என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் பத்திநாதன் கலாவேந்தன் சத்திர சிகிச்சை கூடத்தில் மிகவும் பரபரப்பாக இயங்கி கொண்டிருக்கும் வேளையில் அவரைச் சந்தித்துக் கேட்டபோது, "விபத்து மற்றும் அவசர பிரிவில் இருந்து இந்த எலும்பு முறிவு நெரிவு பிரிவு இயங்க ஆரம்பிக்கின்றது. இங்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் முதியோர்களுக்கான கிளினிக் நடைபெறுகிறது. அதே போன்று வெள்ளிக்கிழமைகளில் சிறுவர்களுக்கான கிளினிக் நடைபெறுகிறது.

எமது வைத்தியசாலை நிர்வாகம் மற்றும் சக வைத்திய அதிகாரிகள் தாதிய உத்தியோகத்தர்கள் ஏனைய ஊழியர்கள் பலத்த ஒத்துழைப்பை வழங்கி வருவதே இன்றைய வெற்றிக்கு காரணம்.

நிர்வாகத்தோடு இணைந்து இந்த வேலைகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். பொதுமக்களும் ஏனைய வைத்தியசாலைகளும் நிறைந்த ஒத்துழைப்பு தருகிறார்கள்" என்றார்.

**(காரைதீவு குறூப் நிருபர்)...**

# இந்தியாவுக்கு எதிராக மீண்டும் மாலைதீவு ஜனாதிபதி கருத்து!

மாலைதீவு ஜனாதிபதி முய்சு ஏற்கனவே இந்தியாவிற்கு எதிராக கருத்துக்களை தெரிவித்து வந்த நிலையில், தற்போது மீண்டும் இந்தியா குறித்து சர்ச்சைக்குறிய கருத்துக்களை பேசியிருக்கிறார்.

மாலைதீவு அதிபராக முகமது முய்ஸு பதவியேற்றதிலிருந்து பல விவகாரங்களினால், உலக மக்கள் மனதில் பதிந்துவிட்டார். குறிப்பாக இந்திய மக்கள் மனதில் என்று சொல்லலாம்.

இவர் பதவியேற்ற காலத்திலிருந்து சீனாவிற்கு ஆதரவாகவும் இந்தியாவிற்கு எதிராகவும் செயல்பட்டு வருகிறார். முதலில் மாலைதீவில் இருக்கும் இந்திய இராணுவ வீரர்களை உடனே வெளியேறும்படி கூறினார். அதுவும், அந்த வீரர்கள், மாலைதீவுக்கு கொடுக்கப்பட்ட ஹெலிகொப்டர்களை இயக்குவதற்கு உதவியாக இருந்த வீரர்களே.

பின்னர் ஒருமுறை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மாலைதீவுக்குச் சென்ற போது, முய்ஸுவின் கட்சியில் உள்ள அமைச்சர் ஒருவர் அவதூறாக கருத்துக் கூறினார். அதுமுதல், இந்திய மக்கள் பலர் மாலத்தீவுக்கு சுற்றுலா செல்வதையே விட்டுவிட்டனர்.



மேலும் இந்தியாவுடன் போடப்பட்ட 'ஹைட்ரோகிராஃபிக் சர்வே' ஒப்பந்தத்தை புதுப்பிக்க போவதில்லை என்றும் மாலைதீவு அறிவித்திருந்தது. அதாவது மாலைதீவில் உள்ள நீர் நிலைகள், பாறைகள், கடற்கரையோரங்கள், கடல் நீரோட்டங்கள் மற்றும் அலை அளவுகள் ஆகியவற்றைப் பற்றி விரிவான ஆய்வை நடத்துவதே 'ஹைட்ரோகிராஃபிக் சர்வே' ஒப்பந்தமாகும்.

இதைவிட முக்கியமான ஒன்று, சீனா உளவு கப்பல்களை மாலத்தீவில் சுற்றவிட, தொடர்ந்து அனுமதி அளித்து வருகிறது.

இப்படியான நிலையில்தான். பிரதமர் நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பதவியேற்றபோது, முதல் வரிசையில் முய்சுவிற்கு இடமளிக்கப்பட்டது.

அதேபோல், அடுத்து நடைபெற்ற விருந்திலும், நரேந்திர மோடி பக்கத்தில் முய்சு அமர்ந்திருந்தார். இது இருநாடுகளுக்கும் இடையே நட்புறவை ஏற்படுத்துவதன் முயற்சியாக இருந்தது.

இந்தச் சமயத்தில், திடீரென்று மீண்டும் முய்சு இந்தியா குறித்து பேசியது சர்ச்சையாகியுள்ளது. மாலைதீவின் 59வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு உரையாற்றிய முய்ஸு,

"மாலத்தீவிலிருந்து வெளிநாட்டுப் படைகள் வெளியேற்றப்பட்டதன் மூலம், பாதுகாப்பு இறையாண்மையைப் பாதுகாப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையை நாம் எடுத்திருக்கிறோம். சீருடையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வெளிநாட்டுப் படையினர் மாலைதீவில் இருக்க மாட்டார்கள் என நான் உத்தரவாதம் அளிக்கிறேன்" என்று பேசியுள்ளார்.

அவரது இப்பேச்சு இந்தியாவை எரிச்சலடையச் செய்யும் விதமாக அமைந்துள்ளது.

# வயநாடு நிலச்சரிவு ஏற்படுத்திய துயரம்!



இந்தியாவின் கேரள மாநிலம் வயநாடு மாவட்டம் கனமழை மற்றும் நிலச்சரிவால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள மேப்பாடி, சூரல்மலை, முண்டகை, அட்டமலை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 300 ஐ தாண்டுமென்று அஞ்சப்படுகின்றது.

நிலச்சரிவை தொடர்ந்து வயநாட்டில் அமைக்கப்பட்டுள்ள 88 நிவாரண முகாம்களில் 8,812 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

சூரல்மலையில் உள்ள 9 நிவாரண மூகாம்களில் 1,695 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து காணாமல் போனவர்களை தேடும் பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

நிலச்சரிவு காரணமாக நொடிப் பொழுதில் வீடுகள், கடைகள் உள்ளிட்ட கட்டங்கள் மண்ணுக்குள் புதைந்துவிட்டன. இராணுவம், பேரிடர் மீட்புப் படையினர், மாநில தீயணைப்புத் துறையினர் மற்றும் உள்ளூர் மக்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஹெலிகொப்டர் உதவியுடன் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

செவ்வாய்க்கிழமை அதிகாலை 2_3 மணியளவில் இந்த நிலச்சரிவு ஏற்பட்டது. முண்டக்கை மற்றும் சூரல் மலை பகுதிகளை இணைக்கும் பாலம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், தற்காலிக இரும்பு பாலம் அமைக்கும் பணியில் இந்திய இராணுவத்தின் பொறியாளர் பிரிவு ஈடுப்பட்டு வருகிறது. இந்த தற்காலிக பாலம் அமைக்கப்பட்ட பிறகு முண்டக்கை பகுதியில் மீட்பு பணிகள் இன்னும் வேகம் பெறும் என மீட்புக் குழுவினர் தெரிவித்தனர். வயநாடு நிலச்சரிவில் சுமார் 100 பேர் பலி மேலும் பலர் மண்ணுக்குள் புதைந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேயிலை மற்றும் ஏலக்காய் தோட்டங்களில் வேலை செய்து வந்த 350 குடும்பங்கள் வசித்து வந்தன என கூறப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர், நிலச்சரிவு ஏற்பட்ட போது தோட்டத்தில் வேலை முடித்து அவர்களது கூடாரங்களில் உறங்கி கொண்டிருந்தவர்கள் ஆவர்.





மீட்புப் பணிக்கு தயார் நிலையில் இருக்கும் கூடுதல் இராணுவ வீரர்கள் தேசிய பேரிடர் மீட்புப்படை மற்றும் பிற அமைப்புகளுடன் இணைந்து இந்திய இராணுவம் வயநாடு நிலச்சரிவு மீட்பு பணியில் ஈடுபட்டு வருகிறது. முண்டகை கிராமத்தில் இருந்து ஏறத்தாழ 150 பேர் மீட்கப்பட்டு மருத்துவ உதவி அளிக்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்துள்ளனர்.

ஏற்கனவே 225 இராணுவ வீரர்கள் மீட்புப்பணியில் ஈடுபட்டு வரும் நிலையில், கூடுதலாக 140 வீரர்கள் திருவனந்தபுரத்தில் தயார் நிலையில் உள்ளனர். தேவை ஏற்படும் பட்சத்தில் இவர்கள் விமானம் மூலம் குறுகிய கால அறிவிப்பில் அனுப்பப்படுவார்கள் என இந்திய இராணுவம் கூறியுள்ளது.

# போஷாக்கு குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கான கலந்துரையாடல்

கல்முனை பிரதேசத்தில் காணப்படும் போஷாக்கு குறைபாடுகளின் நிலைமை தொடர்பாக தெளிவூட்டி அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் விவசாய மற்றும் கால்நடை திணைக்கள உயர் அதிகாரிகளுடனான உயர் மட்ட கலந்துரையாடலொன்று காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு குறித்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் விவசாய மற்றும் கால்நடை திணைக்கள உயர் அதிகாரிகள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பொதுச்சுகாதார மருத்துவ தாதியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.றிஸ்பின், கல்முனை பிராந்தியத்தில் காணப்படும் போசாக்கு குறைபாடு அதனால் ஏற்படும் தாக்கங்கள் குறித்தும் இதன்போது தெளிவாக விளக்கினார்.

எதிர்காலத்தில் உணவு உற்பத்தியும் உணவு உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்ப உதவிகளையும் விவசாய மற்றும் கால்நடைத் திணைக்களங்கள் வழங்குமிடத்து கல்முனை பிரதேசத்தில் போசாக்கு குறைபாட்டினை நிவர்த்தி செய்ய முடியும் என்கின்ற நம்பிக்கை உள்ளதாகவும் டொக்டர் றிஸ்பின் குறிப்பிட்டார்.

சுகாதார வைத்திய அதிகாரிகளின் வேண்டுகோளின் பிரகாரம் போஷாக்கு குறைபாடுள்ள குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு கால்நடை திணைக்களத்தின் ஊடாக கோழிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் உணவு உற்பத்தியை அதிகரித்து அவர்களின் வருமானத்தை கூட்டுவதற்கான திட்டங்களும் தொடர்ச்சியாக வழங்குவதாக இதன்போது கால்நடை திணைக்கள அதிகாரிகள் உறுதியளித்தனர்.

போசாக்குள்ள உணவுகளின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் இறக்காமம் பிரதேசத்தில் சுமார் 500 ஏக்கர் காணியில் பாசிப்பயறு செய்கை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாகவும், நிந்தவூர் பிரதேசத்தில் 4 நிறங்களைக் கொண்ட சோளச் செய்கையும் மேற்கொள்ளப்பட்டு இந்த வாரம் அறுவடை செய்யப்படவுள்ளதாகவும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

குறித்த உற்பத்தியினை நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக செய்து இந்தப் பிரதேசத்தில் உள்ள போசாக்கு குறைபாட்டினையும் வறுமையினையும் போக்குவதற்கு குறித்த இரண்டு திணைக்களங்களும் உதவுவதாக இக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து பின்வரும் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

பாடசாலைகளில் போசாக்குள்ள உணவுகளை ஊக்கப்படுத்தும் முகமாக விவசாய போதனாசிரியர்கள் ஊடாக விழிப்பூட்டல் நிகழ்வுகளை நடாத்துதல்.

பாடசாலைகளில் வழங்கப்படும் காலை உணவுகளில் இரண்டு தினங்கள் பசுப்பால் மற்றும் முட்டைகளை வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளல்.

நிந்தவூர் அல்மஸ்ஹர் பெண்கள் பாடசாலையில் மாதிரி சிற்றுண்டிச்சாலை மற்றும் மாதிரி பாடசாலை தோட்டம் ஒன்றினையும் முதல் கட்டமாக ஆரம்பித்தல்.

போசாக்குள்ள ஆரோக்கிய உணவுகளை மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய இயற்கையான உணவுகளை விற்பனை செய்வதற்கான (ஹெல போஜன) நிலையம் ஒன்றினை கரையோர பிரதேசத்தில் அமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என பல முக்கிய தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.





**எம்.ஐ.எம்.அஸ்ஹர்...**
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# அரசியல் பிரமுகர்கள் அடுத்தடுத்து கொலை!




தமிழகத்தில் அரசியல் தொடர்புடைய பிரமுகர்கள் எட்டு பேர், ஒரே மாத காலத்தினுள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி சேலம் மாவட்டம், தாதகாப்பட்டி காமராஜர் நகரைச் சேர்ந்த சண்முகம் (62) கொடூரமாக வெட்டிக் கொல்லப்பட்டார். அ.தி.மு.கவில், கொண்டலாம்பட்டி பகுதி செயலராக அவர் இருந்தார்.

கஞ்சா விற்பனைக்கு எதிராகச் செயற்பட்டதால், தி.மு.கவைச் சேர்ந்த சேலம் மாநகராட்சியின், 55 ஆவது வார்ட் கவுன்சிலர் தனலட்சுமியின் கணவர் சதீஷ்குமார் உள்ளிட்டோரால் சண்முகம் கொல்லப்பட்டதாக பொலிசில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கொலைக்கான இரத்தம் காய்வதற்குள், அடுத்த நாள் மயிலாடுதுறை மாவட்டம், நடராஜபுரம் வடக்கு தெருவைச் சேர்ந்த விடுதலை சிறுத்தைகள் கட்சி பிரமுகர் ராஜேஷ்(26) இரவு நேரத்தில் மர்ம நபர்களால் கொல்லப்பட்டார். தப்பித்து ஓடக்கூட முடியாத மாற்றுத்திறனாளியான இவர் கொல்லப்பட்டது சோகத்தை ஏற்படுத்தியது.

இக்கொலைகளால் ஏற்பட்ட பரபரப்பு அடங்குவதற்குள் 5 ஆம் திகதி சென்னை பெரம்பூரில், புதிதாக கட்டப்படும் வீட்டருகே, இரவு 7 மணியளவில், பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ரோங் (52) கும்பலால் கொடூரமாக கொல்லப்பட்டார்.

ஆற்காடு சுரேஷ் என்ற ரவுடியின் கொலைக்கு பழிக்கு பழியாக ஆம்ஸ்ட்ரோங் கொல்லப்பட்டதாக பொலிஸ் தரப்பில் கூறப்பட்டாலும், அதன் பின்னணி சதி வலையில், அரசியல் தாதாக்களின் தொடர்புகள் வெளிச்சத்திற்கு வருகின்றன.

ரவுடிகளுக்கு எதிரான வேட்டையில், ரவுடி திருவேங்கடத்தை சுட்டுக் கொன்றதுபொலிஸ். இது தொடரும் என்றும், கூலிப்படையின் கொட்டம் அடக்கப்படும், அரசியல் கொலைகள் தடுக்கப்படும் என்றும் பெரிதும் பேசப்பட்டது.

அதற்கு உரம் ஊட்டும் விதமாக கடமை நேரத்தில் எஸ்.ஐ, இன்ஸ்பெக்டர்கள், டி.எஸ்.பிக்கள் கைத்துப்பாக்கியுடன் இருக்க வேண்டும் என சட்டம் ஒழுங்கு கூடுதல் டி.ஜி.பி டேவிட்சன் தேவாசீர்வாதம் பிறப்பித்த உத்தரவும், ரவுடிகளுக்கு பயத்தைத் தரும் என நம்பப்பட்டது.

அதையெல்லாம் பொய்யாக்கும் வகையில், அடுத்த ஓரிரு நாளில், 8 ஆம் திகதி திருச்சி மாவட்டம், ஜெம்புநாதபுரத்தில் தி.மு.க கிளைச் செயலர் ரமேஷ் (55) என்பவர் வெட்டிக் கொல்லப்பட்டார்.

ஒரு வார இடைவெளிக்கு பின், 16 ஆம் திகதி அதிகாலையில், மதுரை தல்லாகுளம் வல்லபபாய் சாலையில், அமைச்சர் தியாராஜன் வீட்டருகே நடைப்பயிற்சி சென்ற, நாம் தமிழர் கட்சியின் வடக்கு தொகுதி துணைச் செயலர் பாலசுப்ரமணியன் (50) மர்ம நபர்களால் கொல்லப்பட்டார்.

இவ்வாறு தொடர் கொலைகள் அரங்கேறும் சூழலில் எதிர்க்கட்சிகள் எல்லாம் அரசுக்கும், பொலிஸ் துறைக்கும் எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பத் தொடங்கின. ஆனாலும், அரசியல் கொலைகள் தொடர்கின்றன.

## தமிழ்நாட்டில் ஒருமாத காலத்துக்குள் கொடூர சம்பவங்கள்!




சில தினங்களுக்கு முன்னர் கடலூர் மாவட்டம், திருப்பாதிரிப்புலியூர் நவீதம் நகரைச் சேர்ந்த பத்மநாபன் (25) அதிகாலையில் காரில் வந்த கும்பலால் கொல்லப்பட்டார். இவர் கடலூர் 25 ஆவது வார்ட் அ.தி.மு.க அவைத் தலைவராக இருந்தார்.

அதேபோல சிவகங்கை அருகே, வேலாங்குளத்தில் செங்கல் சூளை நடத்தி வந்த செல்வகுமார் (52) சாத்தரசன்கோட்டை பிரதான வீதியில் மர்ம நபர்களால் கொல்லப்பட்டார். இவர், பா.ஜ.கவில் கூட்டுறவு பிரிவு மாவட்ட செயலராக பதவி வகித்து வந்தார்.

இந்தக் கொலைகளால் ஏற்பட்ட பதற்றம் அடங்குவதற்குள் கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு அருகே முவாற்றுமுகம் குன்னத்துவிளையைச் சேர்ந்த ஜாக்சன்(35) ஆறு பேர் கொண்ட கும்பலால் கொல்லப்பட்டார். இவர் திருவட்டார் நகர இளைஞர் காங்கிரஸ் முன்னாள் தலைவராக இருந்தார்.

கொலையாளிகளை கைது செய்யக்கோரி திருவட்டார் பேச்சிப்பாறை சாலையில் மறியலில் ஈடுபட்ட காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் ராஜேஷ் குமார், பிரின்ஸ், தாரகை கத்பர்ட் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு தமிழகத்தில், ஒரே மாதத்தில் அரசியல்கட்சிகளைச் சேர்ந்த எட்டுப் பேர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

'இருநூறு நாட்களில் 595 கொலைகள் அரங்கேறி உள்ளன' என்று அ.தி.மு.க பொதுச் செயலர் பழனிசாமி கூறியுள்ளது கடும் மிரட்சியை ஏற்படுத்தினாலும், அது உண்மைதான் என நிரூபிக்கும் வகையில் நாளுக்கு நாள் கொலைக் கொடூரங்கள் அரங்கேறி வருகின்றன.

பெரும்பாலான கொலைகள் முன்விரோதத்தால் நடத்தப்படுபவை என்பதைப் பார்க்கும்போது, யாருக்கும் தென்படாமல் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் ரவுடிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்பது புரிகின்றது.

மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு கட்டமைப்பில் இருந்த அச்சம் முற்றிலும் நீங்கி, பொலிசாரையே தாக்கும் அளவுக்கு, ரவுடிகள் வீரியம் அடைந்து விட்டனரோ என்ற சந்தேகம் எழுகிறது.

# நேட்டோ–75 ஆவது ஆண்டில் அதிகரிக்கும் பனிப்போரும், இராணுவ மேலாண்மையும்!

நேட்டோ தனது 75 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் வோஷிங்டனில் ஜூலை 8 முதல் 11 வரை மூன்று நாள் உச்சிமாநாடு நடத்தியது. இவ்விழாவின் போது நேட்டோ தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டின் முக்கிய விடயமாக உக்ரைனுக்கான இராணுவ உதவி அமைந்தது. உலகின் மிக சக்திவாய்ந்த இராணுவக் கூட்டமைப்பில் உக்ரைன் நேட்டோ உறுப்பினருக்கான 'திரும்ப முடியாத' (Irreversible Path) பாதையில் இருப்பதாக அதிகாரபூர்வமாக இம்மாநாட்டில் அறிவிக்கப்பட்டது. அத்துடன் இராணுவ உதவியாக குறைந்தபட்சம் 43 பில்லியன் டொலர் வழங்க நேட்டோ உறுதியளித்தது.

இந்த மாநாடு நடைபெறும் வேளையில், ஜேர்மனியில் அமெரிக்க ஏவுகணைகள் நிலை நிறுத்தப்படுவது பனிப்போர் திரும்புவதைக் குறிக்கிறது என்று ரஷ்யாவும் கூறியுள்ளது.

2024 இல் ஒவ்வொரு நேட்டோ நாடும் அதன் இராணுவத்திற்காக எவ்வளவு செலவழிக்கிறது என்பதை யாரும் அறிந்தால் அதிர்ந்து போய்விடுவார்கள்.

உலகின் மிக சக்திவாய்ந்த இராணுவக் கூட்டணியின் 32 உறுப்பினர்கள் இந்த ஆண்டு 1.47 ட்ரில்லியன் டொலர் செலவழிக்க திட்டமிட்டுள்ளனர். அத்துடன் பாதுகாப்பு செலவினங்களை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மேலும் 2% ஆக உயர்த்த நேட்டோ தனது உறுப்பினர்களை வேண்டுகிறது.




1949 இல் நேட்டோ உருவாக்கத்தின் பின்னர், இடதுசாரி நாடுகளில் ஒரு எதிர்ப்புரட்சிக் கொள்கையைப் பின்பற்றியது. அமெரிக்கா, பிரான்ஸ் பிற நேட்டோ நாடுகள் குறிப்பாக இந்தோனேசியா, கொரியா, அல்ஜீரியாவில் காலனித்துவ போர்களை நடாத்தியும் வந்தது.

அதன் பின்னர் நேட்டோ பின்னர் கிரீஸ் மற்றும் துருக்கியில் ஆட்சிக் கவிழ்ப்புகளை ஆதரித்ததோடு, சோவியத் ஒன்றியத்தின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் இடதுசாரி தேசியவாத அரசாங்கங்களுக்கு எதிரானவர்களுக்கு தொடர்ந்து ஆதரவளித்தது.

அத்துடன் பனிப்போரின் ஆரம்ப காலத்தில், அணு ஆயுதப் போரை ஆபத்தில் ஆழ்த்துவதன் மூலம் கிழக்கு ஐரோப்பாவை பயமுறுத்தி வைத்தனர். எவ்வாறாயினும், அமெரிக்க அரசு தனது நீண்டகால இலக்கான சோவியத் ஒன்றியத்தை அழிப்பதை ஒருபோதும் கைவிடவில்லை. இறுதியில் பனிப்போர் 1991 இல் முடிவுக்கு வந்தது. சோவியத் ஒன்றியத்தில் 1917 ஒக்டோபர் புரட்சியால் உருவாக்கப்பட்ட சோசலிச நடைமுறையை கலைத்து, முதலாளித்துவத்தை மீட்டெடுத்து, வார்சா ஒப்பந்தத்தையும் சோவியத் யூனியன் கலைத்தது. சோவியத் யூனியனால் முன்வைக்கப்பட்டதாகக் கூறப்படும் ஆபத்துடன் தனது இருப்பை எப்போதும் நியாயப்படுத்தி வந்த நேட்டோ, பனிப்போரின் பின்னர் தன்னைக் கலைக்கவில்லை. மாறாக மேலும் அதீதமாகவே வளர்ந்தது.




நேட்டோவின் 75வது ஆண்டு நிறைவு மாநாட்டில் ஸ்பெயின் பிரதமர் நேட்டோ அமைப்பு காசா, உக்ரைன் மீதான இரட்டைத் தரத்தை தவிர்க்க வேண்டும் என கோரினார். காசா போரில் பல நேட்டோ நாடுகள் இஸ்ரேலைக் கண்டித்துள்ளன.

2006 ஆம் ஆண்டில், நேட்டோ கூட்டணியின் இராணுவத் தயார்நிலையை உறுதி செய்வதற்காக, அவர்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) குறைந்தபட்சம் 2 சத வீதத்தை பாதுகாப்புச் செலவீனங்களுக்கு வழங்க, கூட்டணியின் பாதுகாப்பு அமைச்சர்கள் ஒப்புக்கொண்டனர்.

தற்போது, அதன் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் இந்த உறுதிமொழியை நிறைவேற்றியுள்ளனர்.

ஒவ்வொரு நேட்டோ உறுப்பினரும் இந்த இராணுவ கூட்டணிக்காக எவ்வளவு செலவு செய்கிறார்கள் என்பதை அறிந்தால் உலகே அதிர்ந்துவிடும். மேலும் இந்த ஆண்டு பாதுகாப்புக்காக 1.47 ட்ரில்லியன் டாலர் செலவழிக்க திட்டமிட்டுள்ளனர்.

உலகிலேயே அதிக இராணுவச் செலவு செய்யும் நாடாக அமெரிக்கா இருந்து வருகிறது. நேட்டோ நாடுகளின் வருடாந்த பாதுகாப்பு செலவினங்களில் மூன்றில் இரண்டு பங்கு அமெரிக்காவை பிரதிநிதித்துவப்படுத்துகிறது, இது 967 பில்லியன் டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நேட்டோ அமைப்பில் அடுத்த நான்கு வருடாந்த பாதுகாப்பு செலவினங்களில் ஜெர்மனி 97.7 பில்லியன் டொலர் செலவிடுகிறது. அதன்பின் இங்கிலாந்து 82.1 பில்லியனையும், பிரான்ஸ் 64.3 பில்லியனையும், போலந்து 34.9 பில்லியனையும் முறையே செலவிடுகின்றன.

2014 உடன் ஒப்பிடும்போது, லாட்வியா, லிதுவேனியா மற்றும் ஹங்கேரி ஆகியவை பாதுகாப்பு செலவினங்களில் மிகப்பெரிய சதவீத அதிகரிப்பைக் கொண்டுள்ளன. லாட்வியா மற்றும் லிதுவேனியா தங்கள் செலவினங்களை 300 சதவீதத்திற்கும் மேலாக உயர்த்தியுள்ளன மற்றும் ஹங்கேரி பாதுகாப்பு செலவினங்களை 225 சதவீதம் அதிகரித்துள்ளது.

ஐரோப்பாவில் அதிகரிக்கும் நேட்டோவின் இராணுவ மேலாண்மை மீளும் பனிப்போரின் அடையாளம் என ரஷ்யா மட்டுமின்றி, பல அரசியல் ஆய்வாளர்களும் கருதுகின்றனர்.

நேட்டோவின் 75வது ஆண்டின் நிறைவில் சாதித்ததும் சந்தித்ததும் எனப்பார்த்தால் முடிவற்ற பதிலே கிடைக்கும். ஆதிக்க மேலாண்மையால் தேவையற்ற பனிப்போருக்கு ஐரோப்பா முகங்கொடுக்க வேண்டியுள்ளது.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

### ஷானி அபேசேகரவை கொலை செய்ய திட்டம்:

# பொலிஸ் ஆணைக்குழு உட்பட மூன்று பேருக்கு அழைப்பாணை

புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவை காரில் வைத்து கொலை செய்ய சதித் திட்டம் மேற்கொண்டதாக கூறப்பட்ட குற்றச்சாட்டில் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண, தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோரை இது தொடர்பில் விளக்கமளிக்குமாறு உயர் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

ஷானி அபேசேகரவின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகக் கூறி ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய முன்வைத்த விடயங்களை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்றம், ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகி உண்மைகளை தெளிவுபடுத்துமாறு கூறி இவ்வாறு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

உயர் நீதிமன்ற நீதிபதிகளான விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ மற்றும் யசந்த கோதாகொட ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் முன்னிலையில் இந்த மனு பரிசீலிக்கப்பட்டது.

புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர தாக்கல் செய்த மனுவில் பிரதிவாதிகளாக பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன், தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய தனது கட்சிக்காரரை வாகன விபத்தை ஏற்படுத்தி கொலை செய்ய சதி நடப்பதாகவும் எந்த நேரத்திலும் இந்த குற்றச்செலை செய்ய வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்தார். இந்த சூழ்நிலையில் தனது தரப்பினரின் உயிருக்கு ஆபத்து உள்ளது.

ஷானி அபேசேகரவுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு திருப்தியாக இல்லையென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய, பாதுகாப்பை அதிகரித்து அவரது உயிரை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறும் நீதிமன்றத்தில் கோரினார்.

# மலையக கலாசார ஒன்றியத்தின் பத்தாவது வருட பூர்த்தி நிகழ்வு

### ஞாபகார்த்த முத்திரை வெளியீடு

**புசல்லாவை தினகரன் நிருபர்**

மலையக கலாசார ஒன்றியத்தின் பத்தாவது வருட பூர்த்தியையிட்டு ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு நிகழ்வு நடைபெறவுள்ளது. எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மலையக கலாசார ஒன்றியத் தலைவர் கே.ஜே.சிவராஜேஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன. IDM NATION CAMPUS மற்றும் ஜனகன் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகனின் அனுசரணையில் மாணவர்களுக்கு இந்த உதவி வழங்கப்படவுள்ளது. அத்துடன் சமூக செயற்பாட்டாளர் கௌரவிப்பு நிகழ்வும் இதன்போது நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்நிகழ்வில் சமூக செயற்பாட்டாளரும் ஜனகன் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகன் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும், சர்வதேச இசைக்கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவரும், தேசிய ஒற்றுமை மற்றும் ஒரு மைப்பாட்டுக்கான செயலகத்தின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனனம் அறக்கட்டளையின் பணிப்பாளருமான அதிவணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ்.சந்துரு பெர்னாண்டோ, இந்திய தூதுவராலயத்தின் முதன்நிலை கலாசார செயலாளர் நவ்யா சிங்லா, தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீ கஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.


தலைநகரில் கல்வி பயிலும் மலையக மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாக கல்விக் கரம் கொடுப்போம் என்ற செயற்பாட்டிற்கு அமைய பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. இதனை மலையக கலாசார ஒன்றியத்தின் மகளிர் பிரிவு ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய பலன்கள்

### (03.08.2024)



**கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)**




**மேஷம்:**
கலைஞர்களுக்கு நீண்ட காலமாக எதிர்பார்த்த ஒப்பந்தம் கிடைத்து சுறுசுறுப்பாக பணியாற்றுவீர்கள். பங்குச் சந்தை கணிசமான லாபம் தரும்.



**ரிஷபம் :**
கூட்டு தொழிலில் மூலப் பொருட்களின் விலையேற்றத்தால் வியாபாரம் பாதிக்கப்படலாம். குடும்பத்தில் அவ்வப்போது சிறுசிறு பிரச்சனைகள் தோன்றி மறையும்.



**மிதுனம்:**
குடும்பத்தில் பிரச்சினைகள் இருந்தாலும் மனைவி வழியில் உதவிகள் கிடைக்கக்கூடும். மற்றவர் விவகாரத்தில் தலையிடாதீர்கள்.



**கடகம்:**
கூட்டுத்தொழில் வியாபாரம் சுமாராக நடைபெற்றாலும் வழக்கமான லாபம் குறையாது. குடும்பத்தில் பழைய கடன் தொல்லை தரலாம்.




**சிம்மம்:**
குடும்பத்தில் சிறுசிறு பிரச்சனைகள் தலை தூக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. புதிய பணியாளர்களிடம் அலுவலகம் பற்றி விமர்சனம் செய்யாதீர்கள்.



**கன்னி:**
தொழிலை விரிவு படுத்த கூட்டாளிகளுடன் இணைந்து ஆலோசிப்பீர்கள். குடும்பத்தில் அமைதியான போக்கு காணப்படும்.



**துலாம்:**
கூட்டுத் தொழில் செய்பவர் கூட்டாளிகளுடன் சுமூகமான உறவை மேற்கொள்ளுங்கள். குடும்பத்தில் உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும்.



**விருச்சிகம்:**
கூட்டுத் தொழில் வியாபாரத்தில் அதிக லாபம் ஏற்படும். குடும்பத்தாரிடம் சுமுகமாக நடந்து கொள்வது பிரச்சினைகளை தவிர்க்க உதவும்.



**தனுசு:**
புதிய வாடிக்கையாளர்களின் அறிமுகமும் அதனால் தொழில் ரீதியான வளர்ச்சியும் ஏற்படும். இடமாற்ற முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும்.



**மகரம்:**
கூட்டுத் தொழிலில் வழக்கத்தை விட லாபம் கூடுதலாக இருக்கும். குடும்பம் சிறு சிறு பிரச்சனைகளை சந்தித்தாலும் சீராகவே நடைபெறும்.



**கும்பம்:**
புதிய கிளை தொடங்கும் எண்ணம் மேலோச்சும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் தோன்றி மறையும்.



**மீனம்:**
வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் குறையாது. கூட்டுத்தொழில் வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் வந்து சேரும். குடும்பத்தில் அமைதி நிலவினாலும் சிறு சிறு பிரச்சனைகளும் இருக்கத்தான் செய்யும்.

## யாழ். நதி நீர் திட்டம்...

மற்றும் சுகாதார திட்டம் (JKWSSP) ஆரம்பிக்கப்பட்டது. தேசிய மட்டத்தில் 2.5 மில்லியன் நீர் இணைப்புகள் காணப்படுவதுடன், இந்த திட்டத்தின் கீழ் மேலும் 60,000 இணைப்புகள் வழங்கப்படவுள்ளன.

இலங்கையின் வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 300,000 மக்களுக்கு சுத்தமான, பாதுகாப்பான குடிநீர் வழங்குவதும் 80,000 பேருக்கு சுகாதார வசதிகளை மேம்படுத்துவதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

உப்பு நீக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2017ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கைச்சாத்திடப்பட்டது. இதுவரை இருபது உயரமான நீர் தொட்டிகள் அமைத்தல், 186 கி.மீ பரிமாற்ற குழாய்கள் மற்றும் 382 கி.மீ விநியோக குழாய்கள் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

உப்பு நீக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான பணிகள் 2021 ஜனவரியில் கையளிக்கப்பட்டன. இத்திட்டத்தின் மொத்தச் செலவு 266 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார பாதுகாப்புத் திட்டம் 2025ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் முழுமையாக நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இங்கு மேலும் கருத்து தெரிவித்த போது,

"இந்த நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்க காணி வழங்கிய மக்களுக்கு நன்றி. தாளையடி பகுதிக்கு தனியானதொரு கிராம சேவகர் பிரிவை நிறுவுமாறு மக்கள் கோரியுள்ளனர். அதனை செய்யுமாறு ஆளுநருக்கு பணிப்புரை விடுப்பேன். இந்த சுத்திகரிப்பு நிலையம் யாழ்ப்பாணத்தின் குடிநீர் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வை வழங்கும்.

எதிர்காலத்தில் வளவை கங்கை நீர் திட்டத்தையும் ஆரம்பிப்போம், அதனால் பூநகரிக்கு நீர் கிடைக்கும். அதேபோல் யாழ். நதி நீர் திட்டத்தை (River For Jaffna) ஆரம்பிப்போம். இந்த திட்டங்கள் வந்தால் யாழில் நீர் பிரச்சினை இருக்காது. வடமராட்சி செழிப்பான பிரதேசமாக மாறும்.

இந்த நீருக்கு நாம் கட்டணம் செலுத்த வேண்டும். அதனால் சூரிய சக்தியை பயன்படுத்தி கட்டணத்தை குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம். இந்த பகுதிக்கு நீர் வழங்கல் முறைகளை செயற்படுத்தி நவீன விவசாயத்தை செயற்படுத்துவோம். நீருக்கு கட்டணம் செலுத்தும் பட்சத்தில் ஒவ்வொரு லீற்றரிலும் உச்ச பயனை அடைய வேண்டும்.

'யாழ் நதி' நீர்த் திட்டத்தின் ஊடாக பொருளாதாரத்தை பலப்படுத்த எதிர்பார்க்கிறோம். காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய இந்தியாவுடன் கலந்தாலோசிக்கிறோம். சீமெந்து நிறுவனம் இருந்த இடத்தில் முதலீட்டு வலயமொன்று ஆரம்பிக்கப்படும், பூநகரியிலும் அதனை செய்வோம். பலாலியில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவோம். காற்று, சூரியசக்தி மூலம் பெருமளவில் இங்கு மின் உற்பத்தி செய்ய முடியும். அதனால் மேலும் பல பொருளாதார நன்மைகள் கிடைக்கும்.

அடுத்த 5 10 வருடங்களில் யாழ்ப்பாணம் அபிவிருத்தி அடைந்த மாவட்டமாக மாற்றப்படும். அதேநேரம் மத்திய அரசாங்கம் யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்மாண பணிகளை மேற்கொள்ளாமல் இருக்க தீர்மானித்துள்ளது. மாகாண சபையினால் அதனை செய்ய முடியும். எனவே நாம் அடுத்தபடியாக பொருளாதார யுத்தத்தை எதிர்கொள்ள ஆரம்பிப்போம். அதற்கான பணிகளை நாம் முன்னெடுக்க வேண்டும். வங்குரோத்து நிலையிலும் இந்த திட்டத்தை நிறைவு செய்ய உதவியவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள், சீன எக்ஸிம் வங்கி, பிணைமுறி கடன் வழங்குநர்களுடன் உடன்பாடுகளை எட்டியுள்ளோம். அதனால் வெளிநாட்டுக் கடன்கள் எமக்கு கிடைக்கும். ஜப்பான் அபிவிருத்தி பணிகளை மீள ஆரம்பிப்பதாக உறுதியளித்துள்ளது. மற்றைய நாடுகளுடனும் அந்த இணக்கப்பாடுகளை ஏற்படுத்துவோம்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசிய போது எட்டப்பட்ட உடன்பாடுகளை கைசாத்திடும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. பால் உற்பத்திச் செயற்பாடுகளுக்காக அமுல், கார்கில்ஸ் நிறுவனங்களுடன் ஆலோசிக்கிறோம். தற்போது நாட்டுக்குள் பணப் புழக்கம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்தும் இதனை தக்க வைத்துக்கொள்ள வேண்டும். நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் வேளையில் யாழ்ப்பாணமும் பொருளாதாரத்தின் முக்கிய பகுதியாக மாறும். இந்த திட்டத்தை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டமைக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு நன்றி. தோட்டப் பகுதிகளை கிராமங்களாக பிரகடனப் படுத்தும் பணிகளையும் அவரோடு இணைந்து முன்னெடுப்போம். எதிர்காலத்தில் இவ்வாறான பல பணிகளை செய்யவுள்ளோம்" என்று மேலும் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர்களான கலாநிதி சுரேன் ராகவன், காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## செப்டெம்பர் முதல்...

அரசாங்க சேவையில் ஓய்வூதியக்காரர்களுக்கு மொத்தமாக 5,500 ரூபா இடைக்கால கொடுப்பனவாக வழங்கப்படுமென்றும், அவர் தெரிவித்தார்.

அரசு ஊழியர் சம்பளத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை பரிசீலித்து தொடர்புடைய எதிர்கால திருத்தங்களை செய்வதற்கு ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்படி யூ.ஆர். செனவிரத்ன தலைமையில் நிபுணர் குழு அண்மையில் நியமிக்கப்பட்டதாகவும் மீளாய்வின் அடிப்படையில் எதிர்வரும் 2025ஆம் ஆண்டு முதல் திருத்தப்பட்ட சம்பள கட்டமைப்பை அமுல்படுத்தும்வரை ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களுக்கு இந்த இடைக்கால கொடுப்பனவை வழங்கவுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்க சேவை ஓய்வூதியக்காரர்களில் தற்போது சுமார் 7 இலட்சம் பேர் ஓய்வூதியம் பெறுவதாகவும் இதற்கமைய 2024ஆம் ஆண்டில் இந்த இடைக்கால கொடுப்பனவை வழங்குவதற்கு அரசாங்கம் 8.4 பில்லியன் ரூபா மேலதிக செலவீனத்தை சுமக்க நேரிடுமென்றும், இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கடன் நிர்வகிப்பதில் சவால்கள் இருந்த போதிலும், ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்கள் தற்போது எதிர்நோக்கும் நிதி நெருக்கடியை கருத்திற்கொண்டு அரசாங்கம் வழங்கும் விரைவான குறுகியகால தீர்வாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மற்றும் அரசாங்க ஓய்வூதியக்காரர்களின் கூட்டு தேசிய அமைப்பின் அதிகாரிகளுக்கிடையில் நேற்று (02) காலை விசேட சந்திப்பு நடைபெற்றதுடன், ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்கி சிரேஷ்ட பிரஜைகளின் வட்டி வீதத்தை அதிகரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

## மனிதனுக்கு இயந்திர இருதயம்...

மருத்துவ உலகின் மிகப் பெரிய சாதனையாக இதனை செய்துள்ளனர். அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் (Food and Drug Administration) மேற்பார்வையிடப்பட்ட ஆரம்ப சாத்தியக்கூறு ஆய்வின் ஒரு பகுதியாக இந்த அறுவை சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது.

இருதயம் டைட்டானியத்தால் கட்டமைக்கப்பட்ட பைவென்ட்ரிகுலர் ரோட்டரி இரத்த பம்ப் ஆகும். இது ஒற்றை நகரும் பகுதியை கொண்டது. இது இரத்தத்தை பம்ப் செய்யும் மற்றும் செயலிழக்கும் இதயத்தின் இரண்டு வென்ட்ரிக்கிள்களையும் மாற்றும் ஒரு காந்த சுழலியை கொண்டுள்ளது. புதிய செயற்கை இருதயம் படைத்து டெக்சாஸ் ஹார்ட் இன்ஸ்டிடியூட் சாதனை இந்த புதிய செயற்கை இருதயம் பிவாகோர் நிறுவனத்தின் பெய்லர் என்ற அறுவை சிகிச்சை நிபுணர்களால் பொருத்தப்பட்டது.

அப்போது அவருக்கு முழுக்க முழுக்க செயற்கையான மாக்லேவ் இருதயம் பொருத்தப்பட்டது. இது போல செயற்கை இருதயம் பொருத்தப்பட்ட முதல் நோயாளி இவரே ஆவார். இந்த செயற்கை இருதயம் 'கடுமையான பிவென்ட்ரிகுலர் இருதய செயலிழப்பு அல்லது யூனிவென்ட்ரிகுலர் இருதய செயலிழப்புள்ள நோயாளிகளுக்கு இடது வென்ட்ரிகுலர் அசிஸ்ட் டிவைஸ் சப்போர்ட் பரிந்துரைக்கப்படாத நிலையில்' செயல்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பெய்லரால் தயாரிக்கப்பட்ட டைட்டானியம் செயற்கை இருதயம், (TAH) 1.4m2 உடல் பரப்பளவை கொண்டுள்ளதாக பிவாகோர் இணையத்தளம் அறிவித்துள்ளது.

இது 'பெரும்பாலான ஆண்களுக்கும் பெண்களுக்கும்' ஏற்றது மற்றும் வயதான ஆணுக்கு உடற்பயிற்சி செய்யும் போது போதுமான இருதய வெளியீட்டை வழங்கும் திறன் கொண்டது என்றும் அந்த இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிப்படையில் இந்த சாதனம்,இருதயம் செயலிழந்தவர்களின் இருதயத்தின் இரண்டு வென்ட்ரிக்கிள்களையும் மாற்றுகிறது.

## இருபது கிலோ... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

யாழ். வளைவுக்கு அருகில் இளைஞர் ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுவதாக பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த அதிரடிப்படையினர் மேற்படி இளைஞரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் வவுனியாவை சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட கஞ்சா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட இளைஞர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப் படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## வடக்கிலிருந்து தமிழ் இளைஞர்ளை...

நெருங்கி செயற்பட்டு வருவதாகவும் குறிப்பாக வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் இளைஞர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புவதில் தமது கட்சி முனைப்புடன் இருப்பதாகவும் அவர் கூறினார். அவர்கள் எதிர்காலத்தில் ஜனாதிபதியாக வேண்டும் அல்லது பிரதமராக வேண்டுமென்றும், நாமல் ராஜபக்ஷ எம்.பி. குறிப்பிட்டார்.

## கிழங்கு, வெங்காயம்,...

ஒரு கிலோகிராம் சிவப்பு கௌப்பி 10 ரூபாவால் குறைக்கப்பட்டு 940 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும். இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராமின் மொத்த விலை 265 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுமென, லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது.

## புதிய அம்சம் கொண்டதாக...

கடவுச்சீட்டுகள் 3 வெவ்வேறு நிறங்களுடன் வழங்கப்படுமென்றும், அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையில் முதலாவது மின்னணு கடவுச்சீட்டு வழங்குவதற்கு தயாராகும் வகையில் அடுத்த இரண்டு மாதங்களுக்கு கடவுச்சீட்டுகளை வழங்குவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

எதிர்வரும் ஒக்டோபர் நடுப்பகுதியில் மின்னணு கடவுச்சீட்டை அறிமுகப்படுத்த முன்னர் பல தொழில்நுட்ப மற்றும் சிக்கல்களை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

நாள் தோறும் வழங்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கை 1,000 ஆக குறைக்கப்பட்டுள்ளது. எனினும் அவசர பயண தேவைகளை கொண்டவர்களுக்கு குடிவரவு, குடியகல்வு திணைக்களம் கடவுச்சீட்டுகளை வழங்கி வருவதாகவும், அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டார்.

## அத்தியாவசிய தேவைகளை...

3 விசேட குழுக்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த தீர்மானம் மிகவும் சரியானதெனவும், வெளிவிகார அமைச்சர் குறிப்பிட்டார்.

ஈரானிலும் உலகிலும் ஏற்படக்கூடிய நிலைமைகளால் இலங்கைக்கு வரக்கூடிய பாதிப்புகளை எதிர்கொள்ள3விசேடகுழுக்களைஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நியமித்தார்.

ஈரானிலுள்ள ஹமாஸ் அமைப்பின் அரசியல் தலைவர் படுகொலையின் காரணமாக ஈரான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் உலக நாடுகளில் ஏற்படக்கூடிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார அழுத்தங்களை எதிர்கொள்வதற்கு முன் ஆயத்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த 3 விசேட குழுக்களை நியமித்தார்.

இக்குழுக்களின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு உயர்மட்ட குழுவையும் ஜனாதிபதி நியமித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரின் அங்கத்துவத்துடன் இந்த குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கங்காராம விகாராதிபதி...

காலமானார். திடீர் சுகயீனம் காரணமாக கொழும்பில் தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் காலமானார்.

ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கல நாயக்கரின் புகழ் பெற்ற சீடர் தலைமுறையில் இருந்த இவர், இந்நாட்டில் அனைவராலும் 'கங்காராம பொடி ஹாமுதுருவோ' என்று அழைக்கப்பட்டார்.

கங்காராம என்றதும் 'கங்காராம பொடி ஹாமுதுருவோ என்று அன்னாரின் பெயர் உச்சரிக்கப்பட்டதும் கங்காராம விகாரையுமே பௌத்த மக்களுக்கு நினைவில் தோன்றும். அவர் அந்தளவுக்கு கங்காராம விகாரையின் தற்போதைய நவீனத்துக்கு முன்னோடியாக செயற்பட்டமையே இதற்கு காரணமாகும்.

கங்காராம விகாராதிபதியின் இறுதிக்கிரியை திங்களன்று நடைபெறுமென ஏற்பாட்டுக்குழு தெரிவித்தது.

## மர்ஜான் பளீல் எம்.பி.யின்...

பந்துல குணவர்தன பிரதம அதிதியாக கலந்துகொண்டு வீதிகளை திறந்து வைப்பார். தர்கா நகர் ஸாவியா (தெருவுப்பள்ளி) வீதி, ஸ்னாபுள்ள வீதி, ஜெம் வீதி மற்றும் காதியாவத்த வீதி ஆகியவையே கார்ப்பட் வீதிகளாக செப்பனிடப்பட்டுள்ளன.

அல்ஹாஜ் மர்ஜான் பளீல் எம்.பி.க்கான திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 15 கிலோ மீற்றர் கிராமிய வீதி அபிவிருத்தி திட்டத்தில் இந்த வீதிகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

அத்துடன் பேருவளை சீனன் கோட்டையில் மர்ஜான் பளீல் எம்.பி.யின் நிதியில் கார்ப்பட் இடப்பட்டு வருகின்ற வீதிகளையும் அமைச்சர் பார்வையிடுவதுடன், வீதிப் பணிகளையும் அவர் ஆரம்பித்து வைப்பார்.

தனது தந்தையாரும் மேல் மாகாண சபையின் முன்னால் உறுப்பினருமான எம்.எஸ்.எம். பளீல் ஹாஜியாரின் சொந்த ஊரான தர்கா நகரில் பல வீதிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் கார்ப்பட் இட்டு அபிவிருத்தி செய்து தருவதற்கு முன்வந்தமைக்கு தர்கா நகர் வாழ் அனைத்து மக்களும் நன்றி தெரிவித்துள்ளனர்.

## இலங்கையரை பாதுகாப்பாக அழைத்து...

பிரகாரம் இஸ்ரேல், லெபனான், ஜோர்டான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வருவதற்காக 5 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக நாட்டில் எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாட்டு நிலை ஏற்படாமல் இருக்க பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகிறோமெனவும், அமைச்சர் சுட்டிக்காட்டினார்

இஸ்ரேலில் மாத்திரம் 12,000க்கும் அதிகமான இலங்கைத் தொழிலாளர்கள், ஜோர்டானில் 15,000, லெபனானில் 7,500, எகிப்தில் கிட்டத்தட்ட 500 பேர் மோதல் வலயத்தில் பெருமளவிலான இலங்கையர்கள் பணியாற்றுவதாக அமைச்சர் கூறினார். ஆபத்தான வகையில் எல்லைகளை கடக்காமல் பாதுகாப்பான முறையில் செயற்படுமாறு இலங்கை தொழிலாளர்களை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

தேவை ஏற்படும் பட்சத்தில் தொழிலாளர்களை கடல் அல்லது விமானம் மூலம் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாகவும், அவர் கூறினார்.

இவ்வாறே சவூதி அரேபியா, குவைட் மற்றும் பிற நாடுகளிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களும் இந்த நிலைமையால் வேலை வாய்ப்பை இழக்கும் அபாயத்தை எதிர்கொள்கின்றனர். தேவைப்படும் போது அவர்களை தாய் நாட்டுக்கு அழைத்து வரவும், அதுவரை பாதுகாப்பான தங்குமிட வசதிகளை வழங்கவும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது எனவே நாடு திரும்பும் தொழிலாளர்களுக்கு உரிய வசதிகளை செய்து கொடுப்பட்டு சமூக மயமாக்கப்படுவார்களெனவும், அமைச்சர் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## யாழ். IT Hub ஏற்பாட்டில்





**யாழ். விசேட நிருபர்**

தொழில் நுட்பம் தொழில் முனைவு, ஆக்கத்திறன் கண்காட்சி நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது. யாழ் IT Hub இன் ஏற்பாட்டில் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமான குறித்த கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது. கண்காட்சியை பார்வையிடுவதற்காக அதிகமான பாடசாலை மாணவர் வருகை தந்தனர்.

## சிறுமி துஷ்பிரயோகம் குடும்பஸ்தர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் 09 வயது சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் வயதான குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றதை அடுத்து சந்தேகநபரை கைதுசெய்துள்ளதுடன், சிறுமியை மீட்டு வைத்திய பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.



இலங்கை வங்கியின் 85வது வருட நிறைவையொட்டி மல்லாகம் கிளையில் இடம் பெற்ற இரத்ததானம் நிகழ்வு. **(யாழ்ப்பாணம் குறூப் நிருபர்)**

## பொது நூலக சிறுவர் திறன்விருத்திமைய மாணவர்களின் மாபெரும் சிறுவர் சந்தை!

**கரவெட்டி தினகரன் நிருபர்**

இணுவில் பொது நூலக சிறுவர் திறன்விருத்திமைய மாணவர்களின் மாபெரும் சிறுவர் சந்தையானது (31/07) புதன் கிழமை. தலைவர் ம.க ஐந்தரூபன் தலைமையில் நூலகக் கொடியேற்றலுடன் ஆரம்பமானது.

மாணவர்கள் தேவாரம் இசைத்ததை தொடர்ந்து மங்கல விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது. வாழ்த்துரையை பேராசிரியர் க.தேவராஜா, ஆசிரியர் இரா. அருட்செல்வமும் அதிபர் உரையை சிறுவர் திறன்விருத்திமைய அதிபரும், முன்னாள் யா/சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அதிபருமாகிய திருமதி . கமலராணி கிருஷ்ணபிள்ளையும் நிகழ்த்தினார்.

தொடர்ந்து அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளையும் போசகர்களான பேராசிரியர் க. தேவராஜா, ஆசிரியர் இரா. அருட்செல்வம், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் இ. துரைசிங்கம் ஆகியோர் சிறுவர் சந்தை நிகழ்வை நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தனர்.



மேற்படி நிகழ்வில் மாணவர்கள் பெற்றோர்கள் மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் மிகவும் ஆர்வத்துடன் பங்கேற்று மாணவர்களின் சந்தையை உற்சாகப்படுத்தி ஏராளமான பொருட்களையும் வாங்கி மாணவரை மகிழ்வித்தார்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில்

## தொடர்ச்சியாக வணிக நிலையங்களில் கொள்ளை: உரிமையாளரின் முயற்சியால் பிடிபட்டனர் கள்வர்

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள வணிக நிலையங்களில் அண்மைக் காலங்களில் தொடர்ச்சியான கொள்ளைச்சம்பவங்கள் இடம்பெற்று வந்த நிலையில், இரு கொள்ளையர்கள் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவமொன்று கடந்த (01/08) வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கடந்த ஒரு மாத காலப்பகுதியில் புதுக்குடியிருப்பு, சிவநகர், ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு நகர் பகுதிகள் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 6 வணிக நிலையங்கள் கொள்ளையர்களால் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இந்த கொள்ளைச்சம்பவங்களை அவாதானித்த சில வணிக நிலைய உரிமையாளர்கள் இரவுகளில் நடமாடித் திரிபவர்களை அவதானித்துள்ளார்கள். இவ்வாறு நேற்று முன்தினம் (01/08) அதிகாலை சிவநகர் பகுதியில் வணிக நிலையம் ஒன்றினை உடைத்து கொள்ளையிட முயற்சித்த கொள்ளையர்கள் இருவரை உரிமையாளர் மற்றும் இளைஞர்கள் மடக்கிப் பிடித்துள்ளார்கள் . புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தினைச் சேர்ந்த 14 மற்றும் 24 வயதையுடைய இரு இளைஞர்களை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

இந்த சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

## ஆசிரியர் கலாசாலையின் கலாதீபம் வெளிவந்தது

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மாதாந்த மின் சஞ்சிகையான கலாதீபம் இதழின் ஆகஸ்ட் மாத இதழ் வெளிவந்துள்ளது.

கலாசாலையில் கடந்த ஜூலை மாதத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் பற்றிய தொகுப்புகளுடன் ஆசிரிய மாணவர்கள் தாம் தரிசித்த பாடசாலைகளில் பெற்ற அனுபவங்கள் குறித்த பதிவுகளையும் தாங்கி இச் சஞ்சிகை வெளிவந்துள்ளது.

கலாசாலை விரிவுரையாளர் தர்ஷினி முத்துராஜாவை பிரதம ஆசிரியராகக் கொண்டு ஊடக மன்றத்தினரால் இச்சஞ்சிகை ஒவ்வொரு முதலாம் திகதியும் வெளியீடு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

## ஒஸ்மானியா கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியின் வைரவிழாவை முன்னிட்டும், பழைய மாணவர்களுக்கான கூட்டம் 11.08.2024 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு மஹ்மூத் மண்டபத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பழைய மாணவர்களுக்கான பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அனைத்துப் பழைய மாணவர்களும் அழைக்கப்படுகின்றீர்கள்.

புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் நடைபெறவிருக்கின்றது என ஒஸ்மானியா கல்லூரி அதிபர் என்.எம். சாபி தெரிவித்தார்.

**(யாழ் பரீட் இக்பால்)**

## துஷ்பிரயோகம் செய்ய முற்பட்ட குடும்பஸ்தருக்கு விளக்கமறியல்

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த வாரம் சிறுமியொருவரை துஷ்பிரயோகம் செய்ய முற்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள துன்னாலைப் பிரதேசத்தில் ஒன்பது வயது சிறுமி ஒருவரை பற்றைக்குள் இழுத்துச் சென்ற 33 வயது உடைய குடும்பஸ்தர் ஒருவர் அப் பகுதி மக்களால் தாக்கப்பட்ட நிலையில் நெல்லியடி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட நெல்லியடிப் பொலிஸார் கரணவாயைச் சேர்ந்த சந்தேகநபரை கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவரை எதிர்வரும் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற உத்தரவிட்டுள்ளது.

## கொடிகாமம் – மிருசுவில் விபத்தில் இருவர் படுகாயம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று (02/08) வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஒருவருடைய வாகனத்தில் சென்ற முன்னாள் நகர சபை உறுப்பினர் ஒருவரும் கார் சாரதியுமே இவ்வாறு விபத்தில் சிக்கி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் முன்னாள் நகரசபை உறுப்பினர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



## பேசாலை பங்கின் கீழ் இயங்கும் முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு நிகழ்வுகள்

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய பங்கின் கீழ் இயங்கி வரும் அமல தாசன், சென்.மேரிஸ் மற்றும் விக்றரிஸ் ஆகிய மூன்று முன்பள்ளிகள் இணைந்து இந்நடப்பு வருட சிறார்களின் வருடாந்த விளையாட்டு நிகழ்வுகளை நடாத்தினர். பேசாலை பங்குத் தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளாரின் தலைமையில் வியாழக்கிழமை (01) புனித வெற்றி அன்னையின் ஆலய முன்றலில் நடாத்தப்பட்ட இவ்விளையாட்டு நிகழ்வுகளில் மூன்று முன்பள்ளிகளிலிருந்தும் 161 சிறார்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



## முல்லைத்தீவு ஜங்கன்குளம் பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த யானை

**ஓமந்தை விஷேட நிருபர்**



முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஜங்கன்குளம் பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் யானையின் சடலம் ஒன்று நேற்றையதினம் மீட்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு ஜங்கன்குளம் பகுதியில் நேற்று (02.08.224) அதிகாலை யானையின் சடலம் இருப்பதாக விவசாயிகளால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதனையடுத்தே குறித்த யானையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. குறித்த யானையின் இறப்புக்கான காரணம் இதுவரை தெரியவில்லை. அப்பகுதியில் ஏற்பட்டுள்ள இந்த மர்மமான யானையின் இறப்பு தொடர்பில், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இணைந்து விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த யானையின் மரணம் தொடர்பான காரணம் இதுவரை உறுதியாகத் தெரியவில்லை. வனஜீவராசிகள் திணைக்களத்தினர், குறித்த யானையின் மரணம் தொடர்பான காரணத்தை மருத்துவ பரிசோதனையின் பின்னரே அறிய முடியும் என தெரிவித்துள்ளனர்.

## மயங்கி வீழ்ந்த வயோதிபர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

ஈச்சமோட்டை கடற்கரை வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது மயங்கி விழுந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் வியாழக்கிழமை (01/08) மாலை உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கடற்கரை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணத்தை சேர்ந்த காபிரியர்பிள்ளை ஹியூமர் (வயது 75) என்ற வயோதிபராவார்.

கடந்த 27ஆம் திகதி பிறந்த தின நிகழ்வு ஒன்றுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு வீடு திரும்பி கடற்கரை வீதி ஊடாக சென்று கொண்டு இருந்தபோது அவர் மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் வியாழக்கிழமை (01/08) மாலை உயிரிழந்துள்ளார். இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

## தலையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட இளைஞன் கிருமித் தொற்று ஏற்பட்டு மரணம்

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தலையில் சத்திர சிகிச்சை செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளமையை கிருமித் தொற்று ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் பெருந்தெரு, புலோலி மேற்கைச் சேர்ந்த யோகலிங்கம் அருள்காந் (வயது 32) என்பவராவார்.

வடமராட்சி கல்வி வலயத்தில் கடமையாற்றி வரும் மேற்படி இளைஞர் தலைப் பகுதியில் ஏற்பட்ட கட்டி காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கடந்த 29 ஆம் திகதி திங்கட்கிழமை மூக்கு துவாரத்தின் ஊடாக கேமரா செலுத்தப்பட்டு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் பின்னர் கடந்த வியாழக்கிழமை (01) அதிகாலை அவர் சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் விசாரணைகளை மேற்கொண்டார்.

## வாள் வெட்டு சம்பவ சந்தேகநபர் ஒரு வருடத்தின் பின் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவம் ஒன்றின் பிரதான சந்தேக நபர் சுமார் ஒருவருட கால பகுதிக்கு பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் மாத கால பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்திருந்தார்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில் பிரதான சந்தேகநபர் தலைமறைவாகி இருந்தார். இந்நிலையில் நேற்றைய தினம் வியாழக்கிழமை சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இஸ்மாயில் ஹனியா படுகொலை மனித உரிமை மீறலாகும்

## கோழைத்தனமான தாக்குதல்களினால் ஒரு போதும் பாலஸ்தீனத்தின் விடுதலை பாதையினை முடக்க முடியாது

ரிஷாட் பதியுதீன் கண்டனம்

**மன்னார் குறூப் நிருபர்**

தமது மண்ணுக்கான உரிமை மீட்பு போராட்டத்தில் நிலைத்து நின்ற பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அரசியல் அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹனியா படுகொலை சம்பவமானது மிலேச்சத்தன வெறியர்களின் முகங்களை காட்டுகிறது. இப் படுகொலைகளை மனிதத்துவம் கொண்ட எவராலும் அங்கீகரிக்க முடியாது.

ஆக்கிரமிப்பினை மட்டும் கொண்டு மக்களையும், சிறுவர்களையும், கர்ப்பிணி பெண்கள் மற்றும் முதியவர்கள் என பாராது கொடூரமான முறையில் கொன்றொழிக்கும் இஸ்ரேலின் இந்த செயலை நான் பிரதிநிதித்துவம் செய்யும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆனது வன்மையாக கண்டிக்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைபலஸ்தீன உறவு என்பது பல ஆண்டுகள் நெருக்கமானது, இந்த உறவானது எம்மில் இருந்து பிரிக்க முடியாததொன்று என்பதால் தான் நாம் இழப்புக்களின் வேதனையை உணர்கின்றோம்.

பாலஸ்தீனத்தின் போராட்டம் என்பது உலகளாவிய வல்லரசுகள் கூட நியாயம் கண்டுள்ள நிலையில் இஸ்ரேல் தொடர்ந்து கட்டுக்கடங்காது, காட்டுமிராண்டித்தனமாக மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் அம்மக்களை மேலும் பல இழப்புக்களுக்குள் தள்ளிவருகின்றது.

அப்பட்டமான மனித உரிமை மீறல்களாக இந்த படுகொலை காணப்படுவதாகவும், எல்லை மீறும் இஸ்ரேலின் இந்த மோசமான மனித படுகொலையை நிறுத்த உலக நாடுகள் தொடர்ந்து அழுத்தம் கொடுக்க வேண்டுவதுடன், இஸ்ரேலின் இத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஹமாஸ் அமைப்பின் தலைவர் மர்ஹூம் இஸ்மாயில் ஹனியாவின் மறைவுக்கு எமது கட்சி ஆழ்ந்த கவலையினை வெளிப்படுத்துகின்றது.

# கிழக்கின் குரல்



## கிழக்கு மாகாண ஆளுநர் வழிகாட்டுதலின் கீழ் மட்டு. நகரில் உலக தமிழ் கலை இலக்கிய மாநாடு





(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

உலக தமிழர்களை ஒருங்கிணைக்கும் வகையில், மட்டக்களப்பில் உலக தமிழ் கலை இலக்கிய மாநாடு மிகவும் கோலாகலமாக நேற்று (02) ஆரம்பமானது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டுதலின் கீழ், கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம், பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் மட்டக்களப்பு மாநகரசபை இணைந்து இந்த மாநாட்டை நடத்துகின்றது.

அதன்படி, நேற்று ஆரம்பமான உலக தமிழ் கலை இலக்கிய மாநாடு இன்றும் மட்டக்களப்பில் இடம்பெறும்.இம்மாநாட்டின் ஆரம்ப நிகழ்வாக கல்லடியில் கிழக்கு பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீடத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையை, ஆளுநர் செந்தில் தொண்டமான், மலேசியா பாராளுமன்ற உறுப்பினர் டத்தோ சரவணன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து அங்கிருந்து 1000 இற்கும் மேற்பட்ட தமிழ் கலைஞர்களின் பங்குபற்றலுடன் ஊர்தி பவனி மற்றும் கலை நிகழ்வுகளுடன் வெபர் மைதானத்தை நோக்கி விழாவில் பங்குபற்றுவோரும், பொது மக்களும் நடைபவணியாக சென்றடைந்தனர் .

வெபர் மைதானத்தில் இலங்கை, இந்தியா மற்றும் ஜெர்மனியை சேர்ந்த பேராசிரியர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், தமிழ் கலைஞர்களின் வருகையுடன் மங்கள விளக்கேற்றப்பட்டு கலைவிழா ஆரம்பமானது.

விழாவில் இலங்கை அஞ்சல் திணைக்களத்தால் உலக தமிழ் கலை இலக்கிய மாநாடு இலங்கையில் நடைபெற்றதை நினைவூட்டும் முத்திரையும் வெளியிடப்பட்டு அதன் முதல் பிரதி ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மலேசியா நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ சரவணன் அவர்களுக்கும் ஏனைய அழைப்பாளர்களுக்கும் முத்திரை வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன், இந்நிகழ்வு தொடர்பான விசேட மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

ஆரம்ப நிகழ்வுகளை தொடர்ந்து கருத்தரங்குகள் இடம்பெற்றது. முதல் நாளுக்கான தமிழ் கலை விழா நிகழ்வுகள் நிறைவடைந்தன.

இரண்டாம் நாளுக்கான கலை நிகழ்வுகளும் கருத்தரங்குகளும் இன்று சனிக்கிழமை கிழக்கு பல்கலைகழகத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமலையில் யுவதி படுகொலை வழக்கு சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(திருகோணமலை தினகரன்)

சேருவில – தங்கநகர் யுவதியின் படுகொலை தொடர்பான வழக்குடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கான விளக்கமறியலை நீடித்து மூதூர் நீதிமன்ற உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு, மூதூர் நீதிமன்ற நீதிபதி திருமதி தஸ்னீம் முகமட் பௌசான் முன்னிலையில் நேற்று (02) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, சம்பவத்துடன் தொடர்புடைய ஏழு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் எதிராளிகள் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணிகள் 3ஆம், 6ஆம் எதிரிகளுக்கு பிணை விண்ணப்பம்கோரி சமர்ப்பணம் முன்வைத்திருந்தனர்.

எனினும், குறித்த விண்ணப்பத்தை நிராகரித்த நீதிபதி, எதிரிகள் தொடர்பான விசாரணைகள் இன்னும் முடிவுக்கு கொண்டுவரப்படவில்லை எனவும், பிணை விண்ணப்பமானது உயர் நீதிமன்றத்தினாலேயே பரிசீலிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், சந்தேக நபர்களுக்காண விளக்கமறியலை மேலும் 14 நாட்களுக்கு நீடித்து உத்தரவிட்டுள்ளார்.

சேருவில பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தங்க நகரைச் சேர்ந்த நடேஸ்குமார் வினோதினி என்ற 25 வயதான இளம் பெண்ணின் சடலம், கிளிவெட்டி கிராமத்தின் ஒதுக்குப்புறமாகவுள்ள பாழடைந்த கிணறு ஒன்றில் இருந்து கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த ஜூலை மாதம் 5ஆம் திகதி மீட்டெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், சடலமாக மீட்டெடுக்கப்பட்ட யுவதியின் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான, யுவதியின் காதலன், அவரது தந்தை, சகோதரி, சிறிய தந்தை, வீட்டு பணியாளர் மற்றும் ஜே.சி.பி வாகனத்துடன் தொடர்புடைய இருவர் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலய ஆடி அமாவாசை சமுத்திர தீர்த்தோற்சவம்



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை சமுத்திர தீர்த்தோற்சவம் நாளை (04) காலை நடைபெறவிருக்கிறது.

இந்த உற்சவம் கடந்த 18 நாட்களாக பகல், இரவுத் திருவிழாக்களாக நடைபெற்று வருகிறது.

அதன்படி, நாளை நடைபெறவுள்ள தீர்த்த உற்சவத்திற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில், ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் தலைமையில் இந்த தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.

## 'போதைக்கு எதிரான இளைஞர் நாம்' காத்தான்குடியில் ஒன்றுகூடல் நிகழ்வு





(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

'போதைக்கு எதிரான இளைஞர் நாம்' எனும் தொனிப் பொருளில் இளைஞர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வொன்று காத்தான்குடி, மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மண்டபத்தில் கடந்த 31 ஆம் திகதி புதன் கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வை, காத்தான்குடி பள்ளி வாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்ததோடு, சம்மேளனத்தின் தலைவர் பொறியியலாளர் ஏ.எம். தௌபீக் தலைமையில் நடைபெற்றிருந்தது. இந்த ஒன்று கூடலில், கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கலாநிதி கே.அஜித் ரோஹன, கிழக்கு மாகாண இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ஏ.குலதுங்க, மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாம் பிரிகேடியர் சந்திம குமாரசிங்க உட்பட இராணுவத்தினர், பொலிஸ் அதிகாரிகள், சம்மேளன பிரமுகர்கள் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்,

இதன்போது, காத்தான்குடி பள்ளி வாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தினால், கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும், கிழக்கு மாகாண இராணுவ கட்டளை தளபதிக்கும் மற்றும் தேசிய போதைப் பொருள் கட்டுப்பாடு சபையின் வடக்கு கிழக்கு மாகாண இணைப்பாளர் ஆகியோருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தோப்பூரில் வயல் விழா

(கிண்ணியா மத்திய நிருபர் கியாஸ்)

கிண்ணியாவின் தோப்பூரில் "வயல் விழா" நேற்று (02) காலை இடம்பெற்றது.

தோப்பூர் விவசாய விரிவாக்கல் நிலையத்தின் ஏற்பாட்டில், விவசாய போதனாசிரியை எஸ். ஜெஸ்மி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்ருந்தது.

இதன்போது, பரீட்சாத்தமாக செய்கை பண்ணப்பட்ட நெல்லினமான BW1571 என்ற நெல்லினமும் பழைய நெல்லினங்கள் இரண்டினதும் அறுவடை இடம்பெற்றது.

பழைய நெல்லினத்தோடு ஒப்பீட்டு ரீதியில் புதிய வகை நெல்லினம் எந்தளவு விளைச்சலை தருகிறது என்பதை கண்டறிவதற்காக பரீட்சார்த்த அறுவடை இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் வீ.பேரின்பராஜா கலந்து சிறப்பித்திருந்தார்.

## கல்முனை அல்–பஹ்ரியா வித்தியாலயத்தின் ஆய்வுகூட மேம்பாட்டுக்காக நிதி ஒதுக்கீடு



அம்பாறை மத்திய தினகரன் நிருபர்

ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் கல்முனை கல்வி வலய கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலயத்திற்கு விஞ்ஞான ஆய்வுகூட மேம்பாட்டுக்காக 02 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அல் பஹ்ரியா மகா வித்தியாலய அதிபர் எம்.ஏ சலாம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு, முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிதி ஒதுக்கீட்டு ஆவணத்தை கையளித்தார்.

இந்நிகழ்வில், கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் யூ.எல் றியால் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினரின் ஆலோசகருமான எம்.ஏ. கலீலுர் ரஹ்மான் பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ பாபா, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எஸ்.எல் ஹமீட், கல்முனை 12 ஆம் வட்டார ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸன் அமைப்பாளர் எம்.எஸ். பளீல், முன்னாள் வேட்பாளர் எம் ரகுமான் உட்பட பழைய மாணவர்கள் சங்கத்தினர், பாடசாலை பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துக் கொண்டனர்.

## ஐ.தே.கவுடன் இணைந்துக்கொண்ட பொத்துவில் அரசியல் பிரமுகர்கள்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)





எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு தெரிவித்து, பொத்துவில் தேர்தல் தொகுதியில், ஐக்கிய மக்கள் சக்தி, அகில இலங்கை தமிழ் மகா சபா ஆகிய கட்சிகளின் பிரமுகர்கள் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கொண்டனர்.

அதன்படி, நீண்ட அரசியல் அனுபவம் கொண்டவரும், பொத்துவில் தொகுதியில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்பினருமான, பொத்துவில் பிரதேசத்தினைச் சேர்ந்த அப்துர் ரஹ்மான் மற்றும் கடந்த பாராளுமன்ற தேர்தலில் அகில இலங்கை தமிழ் மகா சபா கட்சியில் போட்டியிட்ட ஆர். ராஜேஸ்வரன் ஆகிய இருவரே இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்துக்கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி பிரதம அமைப்பாளர் அல்ஹாஜ். யூ.கே. ஆதம்லெப்பையை சந்தித்த அவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துக் கொண்டுள்ளனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றிக்காக உழைப்பதற்கும், அவருடைய வெற்றி கொள்கைகளை பொதுமக்கள் மத்தியில் கொண்டுச் சென்று நாட்டில் சிறந்ததொரு தலைமைத்துவத்தை உருவாக்குவதற்கு தாம் சதா நேரமும் தியாகத்துடன் உழைப்போம் என இதன்போது அவர்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்டத்தில் உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவின் விசேட செயலமர்வு





(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவை உருவாக்கும் நோக்கில், அம்பாறை மாவட்ட செயலகத்தில் செயலமர்வு ஒன்று இடம்பெற்றது.

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையின் இடைக்காலச் செயலகத்தினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவை உருவாக்குவதற்கு ஏதுவான, நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பல்வேறு தரப்பினரின் கருத்துக்களும் கேட்டறிந்து கொள்ளப்பட்டன. இந்த செயலமர்வில், அம்பாறை மாவட்டத்திலுள்ள பல்வேறு தரப்பினரையும் சேர்ந்த கல்விமான்கள்,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, இந்த ஆணைக்குழுவை ஸ்தாபிக்க வேண்டியதன் அவசியத்தை இடைக்கால செயலகத்தின் தலைவர் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர், அதிகாரிகள் விளக்கப்படுத்தினர்.

அத்தோடு, நிகழ்வில் கலந்து கொண்ட பங்கேற்பாளர்கள் தங்கள் எண்ணங்கள் அனுபவங்கள் மற்றும் உண்மை மற்றும் நல்லிணக்க செயல்முறை தொடர்பாக தத்தமது பரிந்துரைகளையும் முன்வைத்திருந்திருந்தனர்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையின் இடைக்காலச் செயலகத்தின் தலைவரும் ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட மேலதிக செயலாளருமான ரஞ்சித் ஆரியரத்ன, கலாநிதி யு.வி.தங்கராசா, சிரேஸ்ட சட்ட ஆலோசகர் இஸட் ஏ.எப். வஸ்னியா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பலஸ்தீனத்தில் உயிரிழந்தவர்களுக்கு காத்தான்குடியில் ஜனாஸா தொழுகை



(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

இஸ்ரேல் காசா போரில், பலஸ்தீனத்தில் படுகொலை செய்யப்பட்டு உயிரிழந்தவர்களுக்கான ஜனாஸா தொழுகை நேற்று (02) காத்தான்குடியில் இடம்பெற்றது.

காத்தான்குடி ஜும்ஆப் பள்ளிவாயல்களில், இந்த மறைவான ஜனாஸா தொழுகை நடைபெற்றது. காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபையின் வேண்டுகோளுக்கிணங்க, பலஸ்தீனத்தில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களுக்கும், படுகொலை செய்யப்பட்ட ஹமாஸ் அரசியல் குழுத் தலைவர் இஸ்மாயில் ஹனிய்யாவுக்கும் மறைவான ஜனாஸா தொழுகை முன்னெடுக்கப்பட்டது.

காத்தான்குடியிலுள்ள ஜும்ஆப் பள்ளிவாயல்களில் ஜும்ஆ தொழுகையின் பின்னர், இடம்பெற்ற ஜனாஸா தொழுகையின்போது பிராத்தனைகளும் இடம்பெற்றன. இதில் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலையில் சிறுபோக நெல் அறுவடை ஆரம்பம்

(கந்தளாய் தினகரன் நிருபர்)

கந்தளாய் குளத்தின் நீர்பாசன பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட விவசாய நிலத்தின் கீழ், சுமார் 22000 ஏக்கரில் சிறுபோக வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.இதற்கமைய கந்தளாய் குளத்தின் நீர்பாசன பொறியியலாளர் பிரிவிலுள்ள, பேராற்று வெளி, வான் எல, வட்டுகச்சி, தம்பலகாமம், சூரியபுர போன்ற பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மை அறுவடை தற்போது இடம்பெற்று வருகின்றன. அதன்படி, சிறந்த விளைச்சல் ஏற்பட்டுள்ளதாகவும், இந்த நெல்லை கொள்வனவு செய்ய அரசாங்கம் சிறந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமைப்பரிசில் நீண்டகால முதலீடாகும்

(அக்குறணை குறூப் நிருபர்)



ஜனாதிபதி புலமைப் பரிசில் மூலம் பல கோடி ரூபா செலவிடப்படுகின்றது. இது நாட்டின் நீண்டகாலத் திட்டத்திற்கான ஒரு முதலீடாகக் கொள்ளலாம் என இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோகன திசாநாயக்கா தெரிவித்தார்.

மாத்தளையில் இடம்பெற்ற வைபவமொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் 60000 மாணவர்களுக்கு மாதம் 6000 ரூபா வீதம் இரண்டு வருடங்களுக்கு மேற்படி நிதி கையளிக்கப்படுகிறது. இலவச கல்வி மூலம் கல்வியை தொடரும் சிலர் பொருளாதார பிரச்சினைகள் காரணமாக கல்வியை இடைநடுவில் கைவிடும் நிலை ஏற்படுகிறது.

எனவே இலவச பாடப்புத்தகம், இலவச சீருடை என்பன மட்டும் போதாது. அவர்களுக்கென மேலதிக செலவுக்கும் பணம் வழங்கப்பட வேண்டும்.

இது நீண்டகால திட்டத்தின் அடிப்படையில் நாட்டுக்கு ஒரு முதலீடாக மீள கொண்டுவரப்படும் என்ற நியதியின் அடிப்படையில் பணத்தொகை வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# தனியார் பஸ் – லொறி நேருக்கு நேர் மோதி விபத்து 6 பேர் படுகாயம்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் லிந்துலை மட்டுக்கலை பகுதியில் நேற்று காலை 8 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 6 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பஸ் - லொறி நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் பஸ்சில் பயணித்த பஸ் சாரதி உட்பட ஐவர் படுகாயமடைந்த நிலையில் லிந்துலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.



நுவரெலியாவிலிருந்து ஹற்றன் நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸூம், கொழும்பிலிருந்து அம்பேவெல அரச கால்நடை பண்ணைக்கு சென்ற லொறியுடன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்தில் தனியார் பஸ் பலத்த சேதமடைந்துள்ளதாகவும், காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது பெய்து வரும் மழையினால் வீதி வழுக்கும் நிலை காணப்படுவதால், ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் வாகனங்களை செலுத்தும் போது கவனமாகவும், மெதுவாகவும் வாகனங்களை செலுத்துமாறு லிந்துலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாரதிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பியின் பிறந்தநாளை முன்னிட்டு விசேட நிகழ்வுகள்

(நுவரெலியா தினகரன் நிருபர்)





மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தனது 72 ஆவது பிறந்த நாளை நேற்றுமுன்தினம் தனது இல்லத்தில் மிகவும் எளிமையாக கொண்டாடினார். இதன்போது சில சர்வதேச பாடசாலைகளுக்கு வாசிகசாலைகளுக்கான புத்தகங்களும் அறநெறி மாணவர்களுக்கான புத்தகங்களும் ஒரு சில பாடசாலைகளுக்கு தொழில்நுட்ப கல்வியை முன்னெடுக்கும் முகமாக அவர்களுக்கான ஸ்மாட் தொலைக்காட்சிகளும் வழங்கி வைக்கப்பட்டன. எதிர்காலத்தில் மலையக பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட மேலும் சில பாடசாலைகளுக்கு ஸ்மாட் தொலைக்காட்சி உட்பட பல பொருட்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன. இதன் மூலமாக ஆசிரியர் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுமென முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் பிரதி தலைவருமான ஆர்.ராஜாராம் தெரிவித்தார். இத்திட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கு இந்தியாவை தலைமையகமாக கொண்டு இயங்கும் 'வித்தியா சக்தி' எனும் அமைப்பு பங்களிப்பு செய்துவருவதுடன் இலங்கையில் 'அட்சயம் நிதியம்' எனும் பெயரில் இது இயங்கி வருகின்றது.

இச்செயற்றிட்டத்தின் மூலமாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை ஒன்லைன் ஊடாக மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளை ஏற்பாடு செய்து கொடுப்பதே இதன் நோக்கமாகும். தற்பொழுது இத்திட்டமானது வடகிழக்கு பகுதிகளில் சில பாடசாலைகளில் வெற்றிகரமான முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் இத்திட்டத்தின் நடைமுறைபடுத்திவருகின்ற ஒருங்கிணைப்பாளர்களான இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள டி.நாகராஜன், எஸ்.சுப்பிரமணியன் ஆகியோரும், நுவரெலியா கல்வி வலயத்தின் உதவி கல்வி பணிப்பாளர் வி.சாந்தகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேலும் மலையக மக்கள் முன்னணியின் புதிய இளைஞர் அமைப்பாளர்களுக்கான நியமன கடிதங்களும் இது வழங்கி இதன்போது வைக்கப்பட்டன.

# மத்திய மாகாண சுதேச வைத்திய ஆணையாளர் நியமனம்



(அக்குறணை குறூப் நிருபர்)

மத்திய மாகாண சுதேச வைத்திய ஆணையாளராகப் ஜயந்த ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார். கண்டியிலுள்ள ஆளுநர் காரியாலயத்தில் வைத்து இதற்கான நியமனக்கடிதம் வழங்கப்பட்டது. இவ்வைபபவத்தில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கலந்துகொண்டார்.

எமது நாட்டின் சுதேச வைத்திய முறையை பிரபல்யப்படுத்துவதன் ஊடாக சுற்றுலாத்துறை வருமானத்தை அதிகரிக்க முடியும். நவீன உலகுக்கு பொருத்தமான முறையில் தேசிய வைத்தியத்துறை மாற்றி அமைக்கப்பட வேண்டும் என தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் மாகாண செயலாளர் அஜித் பிரேமசிங்க, சுகாதார அமைச்சின் செயலாளர் ஜகத் ஆளுநர் பதில் செயலாளர் உதார கொன்சிவத்த உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இலங்கை வங்கியின் 85ஆவது ஆண்டு விழா





(தலவாக்கலை குறூப் நிருபர்)

இலங்கை வங்கி தனது 85 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு தலவாக்கலை கிளையின் முகாமையாளர் எம்.ராமன் தலைமையில் விசேட நிகழ்வுகள் நடைபெற்றன. இதன்போது சர்வமத பிராத்தனைகள் நடைபெற்று கேக் வெட்டி கொண்டாடப்பட்டதுடன் தலவாக்கலை பிரதேசத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் அண்மையில் சித்திபெற்ற மாணவிகளுக்கு பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இலங்கை வங்கி கிளையின் நுவரெலியா பிரதேச முகாமையாளர் பி.விஸ்வநாதன், இலங்கை வங்கி தலவாக்கலை கிளையின் முகாமையாளர் எம்.ராமன், தலவாக்கலை பிரதேச செயலாளர் சுபாஷினி பிரேமசிங்க, இலங்கை வங்கி தலவாக்கலை கிளையின் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# பிரதி அதிபராக பதவியேற்பு



லுணுகல, இராமகிருஸ்ண மத்திய கல்லூரியின் புதிய பிரதி அதிபராக சொக்கையா மகேஷ்வரன் நேற்று முன்தினம் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

பசறை கல்வி வலயத்தின் கனவரல்ல ஹம்சத்வனி தமிழ் வித்தியாலயத்தில் சிறப்பாக செயற்பட்டது.

விக்னேஷ்வரா கல்லூரியின் சமீபத்திய பெறுபேறுகள் கல்வி சமூகத்தின் மதிப்பையும் பாராட்டுகளையும் பெற்று வரும் நிலையில் லுணுகலை ராமகிருஸ்ணா கல்லூரியின் பிரதி அதிபராக பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறித்த நிகழ்வில் கோட்டப் பாடசாலை அதிபர்கள் உட்பட பாடசாலையின் உதவி அதிபர்கள், பாடசாலையின் ஓய்வுநிலை முன்னாள் அதிபர்கள்,ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# மலையக சிறுகதை போட்டி: மொத்த பரிசுத் தொகை இரண்டு இலட்சம்

இளைய தலைமுறையினரிடம் வாசிப்பையும் எழுத்தாற்றலையும் மேம்படுத்தும் முகமாக அவுஸ்திரேலிய எழுத்தாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் மலையக சிறுகதை முன்னோடிகளும் மலைநாட்டு எழுத்தாளர் மன்ற முன்னாள் தலைவர்களுமான அமரர் என்.எஸ்.எம் ராமையா, எஸ். திருச்செந்தூரன் ஆகியோர் நினைவாக மலையக சிறுகதை போட்டியொன்று நடைபெறவுள்ளது.

இலங்கையின் எப்பகுதியிலும் வாழ்பவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளமுடியும். ஆனால் மலையக மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்ட கதைகளே போட்டியில் தெரிவுசெய்யப்படும்.

இப்போட்டி தொடர்பாக அவுஸ்திரேலிய எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும் முன்னணி எழுத்தாளருமான மாத்தளை சோமு கருத்து தெரிவிக்கையில்,

தொலைபேசிகளின் ஆதிக்கத்தால் உலகம் முழுவதும் இளைய தலைமுறையினர் அதில் ஆழ்ந்து





கிடக்கின்றனர். நூல் வாசிப்புப் பழக்கம் அருகிவருகின்றது. இந்நிலைமாற மூத்தோரும் அமைப்புகளும் அக்கறை காட்டவேண்டும். ஆகவே நாங்கள் மலையகசிறுகதைப் போட்டியை நடத்த முயற்சித்துள்ளோம்.

மொத்தபரிசுதொகை இரண்டு இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதற் பரிசு ரூ.80,000, இரண்டாம் பரிசு ரூ.40,000, மூன்றாம் பரிசு ரூ.20,000, ரூ.5000 என்ற வீதம் 12 பரிசுகள் வழங்கப்படும்.

இம்முயற்சிக்கு சிட்னிவாழ் தமிழ் அன்பர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர்.

மலையக மக்கள் இலங்கையில் 200 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டமையால் அதன் இலக்கியம் காலத்திற்கு காலம் தட்டியெழுப்பப்படவேண்டும்.

அதன் அடிப்படையில் சிறுகதை போட்டி நடைபெறுகிறது. இதன் மூலம் அடுத்த தலைமுறைக்கான எழுத்தாளர்களை உருவாக்குவதே எமது நோக்கமாகும். பரிசளிப்பு விழா கொழும்பில் நடைபெறும். பரிசு பெறும் பன்னிரண்டு கதைகளை ஒன்றாக தொகுத்து நூலாக வெளியிடவுள்ளோம்.

மலையக சிறுகதைப் போட்டியை சிறப்புற நடத்த பேராசிரியர் மு. நித்தியானந்தம் ஆதரவு வழங்கி வருகின்றார். மலையக நூல்களின் பதிப்பாசிரியர் எச்.எச். விக்கிரமசிங்க போட்டி இணைப்பாளராக பணியாற்றுகிறார்.

சிறுகதை எட்டு பக்கங்களுக்குள் கணினி தட்டச்சு 12 அளவில் யுனிகோட் சொற்களில் இருக்கவேண்டும்.

அனுப்பவேண்டிய மின்னஞ்சல் ausawriter@gmail.com hendry220649@gmail.com

(காவத்தை தினகரன் விசேட நிருபர்)

## வரலாற்றுப் பிரசித்தி பெற்ற

# புளத்சிங்கள மில்லகந்த அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய ஆடித்தேர் பெருவிழா!

புளத்சிங்கள மில்லகந்த அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய ஆடித்தேர் பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அரசமரமும் வேப்பமரமும் ஒன்றிணைந்த மர நிழலில் அமைந்துள்ள வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடமாக புளத்சிங்கள மில்லகந்த அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் விளங்குகின்றது. சுமார் 200 வருடங்கள் பழமை வாய்ந்த ஒர் ஆலயமாக இது விளங்குகின்றது.

மில்லகந்த தோட்டத்தில் குளக்கரைக்கு அருகாமையில் இலவசமாக காணியைப் பெற்று 1960ஆம் ஆண்டு சிறிய அம்மன் ஆலயமாக கட்டினார்கள். 1968ஆம் ஆண்டு ஆலயத்தில் சிறு கோபுரம் அமைக்கப்பட்டது.

காலம் செல்லச்செல்ல மக்களின் எண்ணங்களும் சிந்தனைகளும் மாறத் தொடங்கின.இப்பிரதேசத்திலுள்ள இந்து இளைஞர்கள் மற்றும் பக்தர்கள் ஒன்றிணைந்து 1989ஆம் ஆண்டு மேற்படி ஆலயத்தில் இந்து மாமன்றத்தை உருவாக்கினர். அதனை தொடர்ந்து காலத்துக்கு காலம் ஆலயத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக அவர்கள் உழைத்து வந்தனர்.

2000ஆம் ஆண்டளவில் ஆலயத்திலுள்ள விக்கிரகங்கள் முறையாக பிரதிஸ்டை செய்யப்பட்டதோடு நவக்கிரக சந்நிதியும் அமைக்கப்பட்டு இந்து மக்கள் வழிபடக்கூடிய ஒரு ஆலயமாக இது அமைக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டளவில் கருவறையின் மேற்கூரையில் சிதைவு ஏற்படவே ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஊர் மக்கள் மத்தியில் ஏற்பட்டதையடுத்து 2006ஆம் ஆண்டு ஆலயத்தின் புனர்நிர்மானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

2006ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆலயத்தின் புனர்நிர்மானப்பணிகளில் ஆலயத்தில் மூன்று தலங்களை கொண்ட 33 அடி உயரமான கோபுரம் அமைக்கப்பட்டு பிள்ளையார், முருகன், எழுந்தருளி அம்மன், வைரவர், நவக்கிரகம், சண்டேஸ்வரி, வழிப்பிள்ளையார்கள் போன்ற சிலைகள் அமைக்கப்பட்டு முறையாக இந்து மக்கள் வழிபடக்கூடிய ஒரு சிறப்பு வாய்ந்த ஆலயமாக அமைக்கப்பட்டது.

ஆலயத்தின் ஆடித்தேர் பெருவிழா கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் ஆகஸ்ட் 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் 03ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 7.00 மணிக்கு புண்ணியாகவாஜனம், விநாயகர் வழிபாடு, மஹா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் மற்றும் விசேட பூஜைகள் என்பன இடம்பெற்று மங்கள கொடியேற்றம் இடம்பெறும். அதனை தொடர்ந்து



அன்று மாலை 6.30 மணிக்கு அலங்கார பூஜை சுவாமி உள்வீதி வலம் வருதல் என்பன இடம்பெறும்.

எதிர்வரும் ஆகஸ்ட் 06ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கும்பம்ப யாகசாலை பிரவேசம், கும்பபூஜை, விசேட சக்தி திரவ்ய ஹோமம், மஹா பூர்ணாகுதி. அம்மன் புகழ்மாலை, புஷ்பாஞ்சலி, 1009 நவோத்திர சகஸ்ரசங்காபிஷேகம் மற்றும் மகேஸ்வர பூஜை இடம்பெற்று அன்னதானமும் வழங்கப்படும். அதனை தொடர்ந்து அன்று 6.30 மணிக்கு அலங்கார பூஜை, சுவாமி உள்வீதி வலம் வருதல், என்பன இடம் பெறும்.

எதிர்வரும் ஆகஸ்ட் 09ஆம் திகதி; வெள்ளிக்கிழமை மஹா லக்ஷ்மி திருவிளக்கு பூஜை மற்றும் இரவு 7.00 மணிக்கு சத்துரு சம்ஹார ஹோமம், அலங்கார பூஜை என்பன இடம் பெற்று அதனை தொடர்ந்து வேட்டைத் திருவிழா, பிராயச்சித்த அபிஷேகம் இடம்பெறும்.

எதிர்வரும் ஆகஸ்ட் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு புலத்சிங்கள வெள்ளமுனியன் ஆலயத்திலிருந்து பக்தர்களின் அரோகரா கோஷம் முழங்க மங்கள வாத்தியம் சகிதம் பக்தர்களின் பால்குட பவனி புலத்சிங்கள நகர் வழியாக ஆலயம் வந்தடைந்து தொடர்ந்து அம்பிகைக்கு பாலாபிஷேகம் நடைபெறும். ஆதனை தொடர்ந்து அன்று மாலை 7.00 மணிக்கு அம்பிகைக்கு விஷேட வசந்த மண்டப பூஜை கெந்த உற்சவம் இடம்பெற்று பக்தர்கள் தீச்சட்டி ஏந்திவர அடியார்கள் அங்கப் பிரதட்சனம் செய்து மங்கள வாத்தியம் முழங்க அலங்கரிக்கப்பட்ட சித்திர தேரில் அம்மன் புலத்சிங்கள தோட்டப்புர மற்றும் கிராமப்புர பக்தர்களுக்கு அருள் பாலித்து அதனைதொடர்ந்து புலத்சிங்கள மில்லகந்தை திப்பட்டா பிரிவில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தை சென்றடையும்.

எதிர்வரும்; ஆகஸ்ட் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு புலத்சிங்கள மில்லகந்தை திப்பட்டா பிரிவில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து தேர் பவனி பக்தர்களின் பால்காவடி பறவைக்காவடி சகிதம் புலத்சிங்கள இந்து மாமன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் மங்கள வாத்தியம் முழங்க புலத்சிங்கள நகர பக்தர்களுக்கு அருள்பாலித்த வண்ணம் ஆலயத்தை வந்தடைந்து அன்று பகல் ஆலயத்தில் மகேஸ்வர பூஜை இடம்பெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

அதனை தொடர்ந்து எதிர்வரும் ஆகஸ்ட் 12ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 12.00 மணிக்கு மேற்படி ஆலய தீர்த்தக்கேணியில் தீர்த்தோற்சவம் நடைபெற்று கொடியிறக்கம் (துவஜா அவரோகணம்) மாவிளக்கு பூஜை என்பனவும் நடைபெறும். அதனை தொடர்ந்து எதிர்வரும் ஆகஸ்ட் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு பூங்காவனமும் திருவூஞ்சல் திருவிழாவும விசேட பூஜைகளும் நடைபெறும். அதனை தொடர்ந்து எதிர்வரும் ஆகஸ்ட் 14ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு அடியார்களின் வைரவர் பொங்கல் பூஜையும் வைரவர் மடையும் நடைபெற்று விழா இனிதே நிறைவு பெறும்.

# தர்காநகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்கத்தின் கௌரவிப்பு விழா





பேருவளை பீ எம் முக்தார்

தர்காநகர் அல்ஹம்ரா, ஸாஹிரா, முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளிலும் 2023 ஆம் வருடம் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் நூற்றுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை கௌரவித்து பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கும் வைபவம் சங்கத்தின் தலைவர் தேசபந்து அல்ஹாஜ் ஏ.பி.எம். ஸூஹைர் ஜே.பி. தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இவ்வைபவம் தர்கா நகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் தர்காநகர் அல்ஹம்ரா மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் மூன்று பாடசாலைகளிலிருந்தும்142 மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

வைபவத்தில் பிரதம அதிதியாக அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி ரூமி ஹாஷிமும், கௌரவ அதிதிகளாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஸ்லம் ஹாஜியாரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான அம்ஜத் ஹாஜியாரும், இப்திகார் ஜெமீலும்,தேசகீர்த்தி நஜீப் ஹாஜியாரும் கலந்துகொண்டனர். விசேட அதிதிகளாக கலிபத்துஷ் ஷாதுலி மௌலவி மபாஸுல் ஹுஸைனும் ஜெஸுக் அஹம்மத்தும் அல்ஹம்ரா அதிபர் பஸ்லியா ஸஹ்ரானும், ஓய்வு பெற்ற அதிபர்களான எம்.இஸட்.எம்.நயீம் முஜீப்தீனும் பிரதி அதிபர் பர்ஹான் நளீமியும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான பதி ஹாஜியாரும் நபீல் நஸீரும் ஹஸீப் மரிக்காரும் முஹம்மது காமிலும் நகர சபை உறுப்பினரான சியான் முனவ்வரும் வைத்தியர்களான ரஹ்மத்துல்லாஹ் நஜீப்பும் ஸாபித் அன்வரும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை ரபீஸ் ஹம்ஸா நெறிப்படுத்தினார். சங்கச் செயலாளர் இப்ராஹிம் இம்ரான், உப தலைவர் ராஸிக் ஹாஜியார் ஆகியோர் பிரமுகர்களை வரவேற்றார்கள்.

# அருட்கலாநிதி எஸ்.சந்துரு பெர்னாண்டோவுக்கு Asia's Icon விருது

*Asia's Icon* விருது வழங்கும் விழா நேற்றுமுன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது. இந்தியக் கலைஞர்கள், அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் இந்திய திரைப்பட நடிகரான கே.ஜி.எப் புகழ் கருட ராம் தென்னிந்திய நடிகை ஷூபா ரக்ஷா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும், சர்வதேச இசைக் கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவரும், தேசிய ஒற்றுமை மற்றும் ஒ ருமைப்பாட்டுக்கான செயலகத்தின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனனம் அறக்கட்டளையின் பணிப்பாளருமான அதிவணக்க த்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ்.சந்துரு பெர்னாண்டோ சிறப்பு அதிதியாக அழைக்கப்பட்டு *Asia's Icon* 2024 ஆம் ஆண்டுக்கான சிறந்த சேவையாளருக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



# சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் சவுதி வர்த்தக சபை சம்மேளனத்துடன் மேற்கொண்ட ஆக்கபூர்வமான சந்திப்பு

சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் உமர் லெப்பை அமீர் அஜ்வத் சவுதி வர்த்தக சபைச் சம்மேளனத்தின் உப தலைவர் பாயிஸ் அல் ஹர்பி அவர்களைக் கடந்த ஜூலை 29ஆம் திகதி அதன் தலைமைக் காரியாலயத்தில் சந்தித்தார்.

இதன் போது சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத்தை வரவேற்றுப் பேசிய கூட்டமைப்பின் துணைத் தலைவர் இரு நாடுகளினதும் வர்த்தக சமூகங்களுக்கிடையிலான தொடர்புகளை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு ஒரு மன்றம் ஏற்பாடு செய்யப்படுவதன் அவசியம் தொடர்பில் வலியுறுத்தினார். மேலும் அவர் சவுதி அரேபியாவின் தொலைநோக்கு – 2030 இலக்குகளைச் சாத்தியப்படுத்துவதற்காக சவுதி வர்த்தக சபைச் சம்மேளனம் ஆற்றியிருக்கின்ற பங்களிப்புகள் தொடர்பிலும் சுருக்கமாக குறிப்பிட்டார்.

பதிலுக்கு உரையாற்றிய தூதுவர், இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்குமிடையிலான வரலாற்று ரீதியான உறவுகள் அடிப்படையில் வர்த்தக ரீதியான தொடர்புகளாகவே காணப்பட்டன என்பதை நினைவு படுத்தியதுடன், இலங்கையில் பல்வேறு துறைகளிலும் பரவிக் காணப்படுகின்ற வர்த்தரீதியான சந்தர்ப்பங்களைபயன்படுத்திக்கொள்வதற்காக முன்வருமாறு சவுதி அரேபியாவின் தனியார் துறையினருக்கு அழைப்பு விடுத்தார். இதன் மூலமான பயன்களை இரு தரப்பினரும் (WinWin benefits) பெற்றுக் கொள்ள முடிகின்றது. தொடர்ந்து பேசிய தூதுவர் இரு நாடுகளினதும் தனியார் துறையினரை இணைத்த வகையில் ஒரு மன்றம் நடாத்தப்பட வேண்டும் என்ற யோசனையை வரவேற்றதுடன் இரு நாடுகளினதும் வர்த்தக சமூகத்தினருக்கும் இடையிலான ஒரு வர்த்தக கவுன்சிலை அமைப்பது தொடர்பிலும் பரிந்துரை செய்தார். இவ்வருடம் இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகள் கட்டியெழுப்பப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைவதைக் கொண்டாடிக் கொண்டிருப்பதைக் கோடிட்டுக் காட்டியதுடன் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்வைக் குறிக்கும் விதத்தில் இலங்கையின் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களையும் உள்ளடக்கியதாக இலங்கை – சவுதி அரேபிய வர்த்தக மன்றத்தினை ரியாத்தில் நடாத்துவது தொடர்பான முன்மொழிவொன்றையும் மேற்கொண்டார்.



இலங்கைக்கு விஜயம் செய்து கொழும்பில் நடைபெறுகின்ற வர்த்தக மன்றத்தில் கலந்து கொள்ள வருமாறு அழைப்பு விடுத்தார்.

இரு தரப்பினரும் குறித்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்ட முன்மொழிவுகளைத் தொடர்ந்தும் முன் கொண்டு செல்வதற்கும், இரு நாடுகளினதும் தனியார் துறையினர் தமக்கு மத்தியிலான கருத்துப் பரிமாறல்களை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்திக் கொடுப்பதற்கும் உடன்பாடு கண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது சம்மேளனத்தின் வர்த்தக கவுன்சில் விவகாரங்களுக்கான பணிப்பாளர் அப்துல் ஹல்க் அல் கஹ்தானி, சம்மேளனத்தின் வர்த்தக கவுன்சில் விவகாரங்கள் தொடர்பான விற்பன்னர் பஹ்த் அல் ஷம்மரி மற்றும் தூதரகத்தின் சார்பில் வர்த்தகம் தொடர்பான இரண்டாம் செயலாளர் தஷ்மா விதானவஸம் ஆகியோரும் பிரசன்னமாகி இருந்தனர்.



அரசாங்க தகவல் திணைக்களத்தின் முன்னாள் தகவல் அதிகாரியும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் எழுதிய 'இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள்' பற்றிய ஆய்வு நூலான 'திதுலன தாரக்கா" என்ற நூலை ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்டவுக்கு நூலாசிரியரால் கையளிக்கப்பட்டது. நேற்றைய தினம் ஊடகத்துறை அமைச்சில் இந்நிகழ்வு நடைபெற்றது. இலங்கை இலக்கிய வரலாற்றில் முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பற்றி எழுதிய முதலாவது ஆய்வு நூலாக இந்நூல் பல்கலைக்கழக பேராசிரியர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.



கொழும்பு 13,புதுச்செட்டித் தெரு ஹாரே கிருஷ்ண ஆலயத்தின் கட்டட நிதிக்காக ஜனநாயக மக்கள் காங்கிரஸ் டைல் பசைகள் 130 பேக்குகளும் சிறுதொகை பண உதவிகளையும் வழங்கி வைத்தனர். ஜனநாயகம் மக்கள காங்கிரஸ் அமைப்பாளரும் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஜோசப் பெர்னாண்டோ உட்பட ஜனநாயகம் மக்கள காங்கிரஸ் உறுப்பினர்களையும் படத்தில் காணலாம். (படம் : நஸார்)



யாழ்ப்பாணம், பேராதனை, கிழக்கு , தென்கிழக்கு பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களுக்கான "சாசனவியல் பயிலரங்கு" இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கடந்த யூலை 22ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது. சாசனவியல் பயிலரங்கு பூர்த்தி நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட யாழ்/பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எஸ். பத்மநாதன், பேராசிரியர். ப. புஸ்பரட்டினம், கே. கிரிதரன், ஓய்வுநிலை செயலாளர் உடுவை தில்லை நடராஜா, திருமதி. தேவகுமாரிஹரன், எஸ். தனபாலா, பாபுசர்மா இராமச்சந்திர குருக்கள் ஆகியோர் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

# 24 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் கற்பிட்டி நாவற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயத்தில் 24 வருட காலமாக சேவையாற்றிய திருமதி.மெரின் ஆசிரியை சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார். இதனை முன்னிட்டு கௌரவிப்பு மற்றும் சேவைநலன் பாராட்டு விழா அண்மையில் (29) நாவற்காடு புனித சிந்தாத்திரை மாதா ஆலயத்தில் நடைபெற்றது.

திருமதி மெரின் ஆசிரியையின் குடும்பம் சகிதம் பிரமுகர்கள் மாலை அணிவிக்கப்பட்டு மலர்ச்செண்டு வழங்கி வரவேற்கப்பட்டனர்.

பின்னர் மங்கள தீபம் ஏற்றி இறையாராதனையுடன் விழா நடைபெற்றது. பாடசாலை அதிபர் பீ.ஜெனற்ராஜ் வரவேற்புரையை நிகழ்த்தினார்.



இந்நிகழ்வில் உதவிப் பங்குத்தந்தை அருட்பணி ஸ்டனிஸ் அடிகளார், தேத்தாப்பளை றோ.க.த. வித்தியாலயத்தின் அதிபர் அருட்சகோதரி டெலிசியா, புத்தளம் வலயக்கல்விப் பணிமனையின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் எம். ஏ.எம்.அனீஸ், ஆரம்பக் கல்வி பாட இணைப்பாளர் வீ.ஈ. அருணாகரன், ஓய்வு நிலை உதவிக்கல்விப்பணிப்பாளர்களான வீ.எஸ்.புஸ்பராஜன், இஸட்.ஏ.சன்ஹீர், ஆசிரிய ஆலோசகர் திருமதி, ஜீ. விஜயலக்ஸ்மி உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் முக்கிய விடயமாக பணிநிறைவு பெறும் ஆசிரியைக்கான 'கணியமுதம்' என்ற சஞ்சிகையும் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வை மேலும் அலங்கரிக்கும் விதத்தில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் அரங்கேறின. அதனைத்தொடர்ந்து விழாவின் முக்கிய தருணமாகிய திருமதி மெரினை கௌரவிக்கும் நிகழ்வு ஆரம்பமானது. பொன்னாடை போர்த்தி அதிபர் உட்பட ஆசியர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர்கள் அனைவரும் அன்பளிப்புக்களை வழங்கினர்.




## தேயிலையின் எதிர்காலத்திற்காக ISO அமைப்பு நடாத்திய கூட்டம்



சர்வதேச தரநிர்ணய அமைப்பின் (ISO) தேயிலை குறித்த தொழில்நுட்பக் குழுவின் (ISO TC 34/ SC 8) 30ஆவது பொதுக்குழு கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றதுடன், 10 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த தேசிய தரநிர்ணய அமைப்புகளைப் (NSBs) பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் கூடிய BESPAFOOD திட்டத்தின் ஆதரவுடன் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் (SLSI) இவ்விசேட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதுமாத்திரமின்றி, ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பின் (UNIDO) ஆதரவுடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தக் கூட்டமானது, COVID19 தொற்றுநோய்க்குப் பிறகு நடைபெறுகின்ற முதலாவது நேருக்கு நேர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

உலகெங்கிலும் உள்ள உறுப்பு நாடுகளுக்கு தேயிலைத் துறையைச் சார்ந்த புதிய தரநிலைகள் மற்றும் ஆராய்ச்சி பற்றி விவாதிக்கவும், வளர்ச்சி முன்னேற்றத்திற்கு ஏற்ப இருக்கும் தரநிலைகளை மேம்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கின்ற ISO/TC 34/SC 8 கூட்டமானது அந்தந்த நாடுகளின் சந்தை போக்குகளைப் புரிந்து கொண்டு அவற்றுக்கு ஏற்ப செயல்படவும் வாய்ப்பளிக்கிறது.

இதுதொடர்பில் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி சித்திகா ஜீ சேனரத்ன கருத்து தெரிவிக்கையில், "இந்த முக்கியமான கூட்டத்தை நடத்துவது இலங்கைக்கு கிடைத்த பெருமையாகும். இலங்கையில் தேயிலை உற்பத்தி துறையானது ISO தரநிலைகளுடன் முழுமையாக செயல்படுகின்றது. அதேபோல, தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் நிலையான தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் ஒரு நாடாக நாம் ஒரு முக்கியமான பணியைச் செய்து வருகின்றோம்" என அவர் தெரிவித்தார்.

## அறிவுறுத்தல் பலகைகளை வழங்கிய சியபத பினான்ஸ்



சியபத பினான்ஸ் பிஎல்சி அதன் வருடாந்த சமூகப் பொறுப் புணர்வு பிரசாரத்தின் ஒரு பகுதியாக, சமீபத்தில் முடிவடைந்த 'தெவிநுவர எசல பெரஹெர 2024'க்கு இணங்க, கந்தர பொலிஸாருக்கு "No Parking" அறிவுறுத்தல் பலகைகளை நன்கொடையாக வழங்கியது. விஷ்ணு தெய்வத்தை வணங்கிக் கொண்டாடப்படும் வருடாந்திரத் திருவிழாவான எசல பெரஹரவைக் கண்டுகளிப்பதற்காக நாடு முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான இந்து மற்றும் பௌத்த மக்கள், அங்கு வருகை தருகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும், தெவிநுவர எசல பெரஹறா, நடனம், இசை, வண்ணங்கள், யானைகள் அணிவகுப்பு என நமது தேசத்திற்கு தனித்துவமான பாரம்பரிய நிகழ்வுகளால் தெருக்களை அலங்கரிக்கிறது. ஊர்வலத்தின் போது பொலிஸாரின் போக்குவரத்து கட்டுப்பாட்டு முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் இந்த அறிவுறுத்தல் பலகைகள் அன்பளிப்பு செய்யப்பட்டன. மாத்தறை சியபத பினான்ஸ் பிஎல்சியின் கிளை முகாமையாளர் திரு. ஜனக விபுலவினால் கந்தர பொலிஸ் அலுவலகத்தின் தலைமையக பொலிஸ் அதிகாரி தேசபந்து சேனரத்னவிடம் அவை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

## டிஜிட்டல் கண்டுபிடிப்புகளின் ஆற்றலை வெளிப்படுத்தவுள்ள TAGS விருதுகள்




இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (CA ஸ்ரீலங்கா) 59வது ஆண்டாக பெருநிறுவன அறிக்கையிடலில் சிறந்து விளங்குவதைக் கொண்டாடும் மதிப்புமிக்க TAGS விருதுகள் 2024க்கான விண்ணப்பங்களை கோருவதை பெருமையுடன் அறிவிக்கிறது. நிதி மற்றும் நிதி அல்லாத அறிக்கையிடலில் புதுமை மற்றும் சிறந்த நடைமுறைகளின் கலங்கரை விளக்கமாக, TAGS விருதுகள் 12 டிசம்பர் 2024 அன்று கொழும்பில் உள்ள ஷங்ரிலா ஹோட்டலில் பிரமாண்டமான விழாவாக நடைபெறும்.

TAGS விருதுகள், (வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், நிர்வாகம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றைக் குறிக்கும்), 1964 ஆம் ஆண்டு முதல் ஆண்டு அறிக்கை விருதுகள் என அறியப்பட்டது, நிதி மற்றும் நிதியல்லாத அறிக்கையிடலில் சிறந்து விளங்கும் நிறுவனங்களைக் கொண்டாடுவதற்கும் அங்கீகரிப்பதற்குமான பாரம்பரியத்தைத் தொடர்கிறது. பன்னாட்டு நிறுவனங்கள், ப்ளூசிப் நிறுவனங்கள், கூட்டு நிறுவனங்கள், SMEகள், NPOகள், NGOக்கள் மற்றும் வருடாந்த அறிக்கைகளை உருவாக்கும் பிற நிறுவனங்கள் உட்பட, பரந்த அளவிலான நிறுவனங்களுக்கு இந்தப் போட்டி திறக்கப்பட்டுள்ளது.

## 'தீவா கரத்திற்கு வலிமை' ஊவா வெற்றியாளர்களை கௌரவிப்பு

Women in Management (WIM) அமைப்புடன் இணைந்து Hemas Consumer Brands நிறுவனத்தின் முதன்மையான சலவை பராமரிப்பு வர்த்தகநாமமான தீவாவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'தீவா கரத்திற்கு வலிமை' தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டமானது, பெண் தொழில்முனைவோருக்குத் தேவையான அறிவு, திறன், நம்பிக்கையை வழங்குவதன் மூலம் அவர்களின் வணிக செயற்பாடுகளை நிர்வகித்தல் மற்றும் மூலோபாய ரீதியாக அதனை வழிநடத்திச் செல்லல் ஆகிய வற்றிற்கு ஊக்கமளிக்கும் வகையில் சிறப்பாக திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாணத்தின் வெலிமடையில் நடைபெற்ற தீவா கரத்திற்கு வலிமை தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் வெற்றியாளர்களைக் கொண்டாடும் பிரத்தியேக நிகழ்வை தீவா அண்மையில் நடாத்தியிருந்தது.

இலங்கை முழுவதிலும் உள்ள திறமையான பெண் தொழில்முனைவோருக்கு கைகொடுக்கும் தீவாவின் அர்ப்பணிப்பை இந்த திட்டம் கோடிட்டுக் காட்டுகிறது. இந்தத் திட்டம் ஒவ்வொரு பங்கேற்பாளரின் முன்னேற்றம் மற்றும் திறனைக் கண்காணித்து, மதிப்பீடுகள் நிறைவடைந்தவுடன் சிறந்த மற்றும் உயர்ந்த இடத்தைப் பெறும் பெண் தொழில்முனைவோரை ஊக்குவிக்கிறது. வணிகப் பதிவு, கணக்கீடு மற்றும் கணக்குப் பதிவேடு, ஏனைய பெண்களுக்கு வேலைவாய்ப்பு, மாதாந்த விற்பனையில் முன்னேற்றம், பொதியிடல் மற்றும்



வர்த்தகநாம பிரபலப்படுத்தல், புதிய வாடிக்கையாளர்களை பெறுதல், புத்தாக்கமான முறையிலான முயற்சிகள் போன்ற அளவுகோல்களின் மூலம், ஒரு முழுமையான மதிப்பீட்டு செயன்முறையின் கீழ் பெண் தொழில்முனைவோர் இங்கு மதிப்பிடப்படுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் பின்வரும் பெண் தொழில்முனைவோர் வெலிமடையில் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டனர். முதலாம் இடம், "Little Farm" உரிமையாளர் திருமதி மனோஜா பிரசாந்தி. இரண்டாவது இடம் "Omalmi Roses & Cattle Farm" உரிமையாளர் திருமதி நிலந்திகா தமயந்தி. மூன்றாவது இடம் "Apsara Rose Gardens" உரிமையாளர் திருமதி ஹேமமாலி அமரசேகர. நான்காவது இடம் "Asha Flora" உரிமையாளர் திருமதி ஆஷா கீதாசலுனி மற்றும் "Ceylon Fashion" உரிமையாளர் திருமதி நிஷாதி ஹன்சிகா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## LIMA ELO7 மின்சார இருசக்கர வண்டியை அறிமுகப்படுத்தும் சிங்கர் நிறுவனம்

புத்தாக்கம் மிக்க எடுத்துக்காட்டான நிறுவனமும் நுகர்வோர் இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் வீட்டு உபகரண பொருட்கள் துறையில் முன்னணியில் உள்ள நிறுவனமுமான Singer Sri Lanka PLC (சிங்கர் ஸ்ரீலங்கா) நிறுவனம், இலங்கைக்கு புதிய LIMA ELO7 electric bike (மின்சார மோட்டார் சைக்கிளை) அறிமுகப்படுத்தியுள்ளதன் மூலம், இரு சக்கர வண்டி பயண அனுபவத்தில் புரட்சியை ஏற்படுத்த தயாராகியுள்ளது.

ஸ்டைலான, சீரான மற்றும் நிலைபேறான பயணத்தின் புதிய சகாப்தத்தை குறிக்கும் வகையிலான LIMA ELO7 ஆனது, சிங்கர் விற்பனை நிலையங்களில் மிகவும் மலிவான விலையில் கிடைக்கின்ற ஒரு நேர்த்தியான மின்சார மோட்டார் சைக்கிள் வண்டியாகும்.

இது இலங்கையில் சிங்கரின் நம்பகமான நற்சான்றிதழ்களின் ஆதரவுடன் நேர்த்தியான வடிவமைப்பு மற்றும்



சூழல் நட்பு தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கொண்ட கலவையாக காணப்படுகின்றது.

Singer (Sri Lanka) PLC நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மஹேஷ் விஜேவர்தன இது தொடர்பில் தெரிவிக்கையில்,

"LIMA ELO7 மின்சார இரு சக்கர வண்டியின் அறிமுகத்தின் மூலம் இரு சக்கர வாகன சந்தையில் ஒரு அதிர்வை ஏற்படுத்துவதில் நாம் பெருமை கொள்கிறோம்! மின்சாரத்தில் இயங்கும் இரு சக்கர வண்டிகள் மற்றும் கார்கள் போன்ற வாகனங்கள், பூமியின் நிலைபேறான தன்மைக்கு இன்றியமையாத போக்குவரத்தின் எதிர்காலம் என, உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

## பிரமாண்ட திரையில் அதீத துல்லியம்; Samsung Neo QLED 8K

பெரிய தொலைக்காட்சித் திரையானது பொதுவாக ஒரு நல்ல விடயமாகும். காலப்போக்கில், பெரிய தொலைக்காட்சிகள் அதிகம் விரும்பப்படுகின்றதாக மாறியது மட்டுமல்லாமல், நுகர்வோர் மத்தியில் மிகவும் பிரபலமாகிவிட்டன. திரைப்படத் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், இப்போது நமக்குப் பிடித்த கதைகளை மிகவும் யதார்த்தமான முறையில் திரையில் உயிர்ப்பிக்கின்றதால், அவை பார்வையாளர்களை அவர்கள் பார்க்கும் உள்ளடக்கத்தில் முழுமையாக மூழ்க வைக்கின்றன.

Samsung's Neo QLED 8K தொலைக்காட்சியானது மிகப் பெரிய திரையை கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், அதிநவீன தொழில்நுட்பங்களின் மூலம் மிகையான உணர்வியல் பார்வை அனுபவத்தையும் வழங்குகிறது. குறிப்பாக, மிகப் பெரிய தொலைக்




காட்சிகள் தற்போது சந்தையில் அதிகளவில் காணப்பட்டாலும், பெரிய திரை அனுபவத்தை வழங்குவதில் வியக்க வைக்கும் மூன்று முக்கிய அம்சங்களுடன் Samsung முன்னணியில் உள்ளது.

தொலைக்காட்சி திரைகள் அளவில் பெரிதாகும்போது, காட்சியின் தரத்தைப் பராமரிப்பது சவாலான விடயமாகும். ஆனால் Samsung's Neo QLED 8K தொலைக் காட்சிகளுடன் ஒப்பிடும்போது நான்கு மடங்கு அதிக Pixels வழங்குவதன் மூலம் இதை நிவர்த்தி செய்கிறது. இதனால் மிக நெருக்கமாக அமைக்கப்பட்ட Mini LEDs மற்றும் மேம்படுத்தப்பட்ட செயலாக்கத்துடன் உயர்தர காட்சித்தரம் கிடைக்கின்றது. இதனால் மிகப்பெரிய திரைகளிலும் கூர்மையான, உயிரோட்டமான காட்சிகளை வழங்குவது உறுதிசெய்யப்படுகின்றது.

புதியதொரு செயல்திறனை வழங்குவதற்கான Samsung இன் அர்ப்பணிப்பை Neo QLED 8K இன் படத்தரத்தின் பின்னால் உள்ள இயக்கக் காரணிகளில் (driving forces) தெளிவாகக் காணலாம். இதில் Neural Quantum Processor 8K மற்றும் Quantum Matrix Technology Pro ஆகிய தொழில்நுட்பங்கள் துல்லியத்தினை மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைந்து செயல்படுகின்றன, அதன் அற்புதமான யதார்த்தத்துடன் உள்ளடக்கத்தை உயிரோடு கொண்டு வருகின்றன.

## 3 புதிய தங்கக் கடன் மத்திய நிலையங்களை திறந்த HNB FINANCE



கொழும்புக்கு வெளியில் தங்கக் கடனுக்கான அதிக தேவைக்கு தீர்வாக, பெலியத்த, குருநாகல் மெட்ரோ மற்றும் குளியாபிட்டிய நகரங்களில் அமைந்துள்ள HNB FINANCE PLC கிளை வளாகத்தை மையமாகக் கொண்டு 3 புதிய தங்கக் கடன் மத்திய நிலையங்கள் அண்மையில் திறக்கப்பட்டன.

இதன்படி, HNB FINANCE தங்கக் கடன் நிலையத்தின் பெலியத்த தங்கக் கடன் மத்திய நிலையம் இல. 51/1 மாத்தறை வீதி பெலியத்த, பெலியத்த நகரத்திலும், புதிய குருநாகல் மெட்ரோ கிளை தங்கக் கடன் நிலையம் இல. 155 புத்தளம் வீதி குருநாகலிலும் மற்றும் குளியாப்பிட்டிய கிளை தங்கக் கடன் மத்திய நிலையம் இல. 355, மாதம்பே வீதி குளியாப்பிட்டிய ஆகிய இடங்களிலும் திறக்கப்பட்டுள்ளன.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட HNB FINANCE பெலியத்த தங்கக் கடன் சேவை மத்திய நிலையத்தின் திறப்பு நிகழ்வு நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளரும் கடன் சேவைகளின் தலைவருமான திரு. இந்துனில் ஜயவர்தன தலைமையில் நடைபெற்றதுடன், குருநாகல் மெட்ரோ மற்றும் குளியாபிட்டிய புதிய தங்கக் கடன் மத்திய நிலையங்கள் கிளை வலையமைப்புத் தலைவரின் உதவிப் பொது முகாமையாளர் திரு. பதும் சம்பத் குரே மற்றும் உதவிப் பொது முகாமையாளர் பிரிவுத் தலைவர் தயாரிப்பு வணிக முகாமைத்துவப் பொது முகாமையாளர் லக்ஷ்மன் எராஜ் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. HNB FINANCE தங்கக் கடன் மத்திய நிலையங்கள் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் தங்கத்திற்கான தொழில்துறையில் சிறந்த மதிப்பை வழங்குவதும், மற்ற நிறுவனங்களில் வைத்திருக்கும் தங்கத்தை மீட்டு, அதற்கு அதிக பணம் கொடுக்கும் சேவையும் HNB FINANCE தங்கக் கடன் சேவைகளிடையே அதிகப் பிரபலத்தைப் பெற்றுள்ளது.

## முதல் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடத்தும் Fairway Koswatte நிறுவனம்

Fairway நிறுவனத்தின் சமீபத்திய நிர்மாணமான Urban Homes Koswatta (UHK) அண்மையில் தனது முதலாவது வருடாந்த பொதுக் கூட்டத்தை (AGM) பெருமையுடன் நடாத்தியிருந்தது. இந்நிகழ்வானது, புதிய வீட்டு உரிமையாளர்களுக்கு வீடுகளின் நிர்வாகப் பொறுப்புகளை உத்தியோகபூர்வமாக கையளிப்பதைக் குறிக்கிறது. அந்த வகையில், இந்த மைல்கல்லைக் கொண்டாடவும், கட்டடத்திற்குள் சுறுசுறுப்பான மற்றும் சிறப்பாக நிர்வகிக்கப்படும் சமூகமொன்று ஏற்படுவதற்குமான தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தவும் குடியிருப்பாளர்கள் இந்த ஒன்றுகூடலில் கலந்து கொண்டிருந்தனர்.



UHK ஆனது, கட்டட நிர்மாணத்தின் ஆரம்பம் முதல் நிறைவு வரை, நிலைபேறான, நவீன நகர்ப்புற வாழ்க்கைக்கான தூரநோக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த 250 அடுக்குமாடி வீடுகளைக் கொண்ட Fairway Holdings நிறுவனத்தின் திட்டமானது, சிறந்த வசதி, சொகுசு, ஆடம்பரம் ஆகியவற்றை ஒன்றாக இணைக்கும் அனைவரும் விரும்பக்கூடிய வீடுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில் காணப்படும் முக்கிய அம்சங்களில் வாழ்வதற்கு உகந்த நேர்கோட்டு கட்டடக்கலை, உயர்ந்த பொறியியல் அம்சங்களுடனான மரத்தினாலான கதவுகள், இரு பக்கம் இணைக்கப்பட்ட உடையாத கண்ணாடி ஜன்னல்கள், சிறந்த மின்சக்தி திறன் கொண்ட மின் விளக்கு தொகுதிகள், குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட பல்வேறு நவீன தீர்வுகள் ஆகியன அடங்குகின்றன.

Urban Homes Koswatta குடியிருப்பில் வசிப்பவர்கள் ஏராளமான வசதிகளை அனுபவிக்கலாம். இதில் அதிநவீன உடற்பயிற்சி மையம், பெரிய நீச்சல் தடாகம், ஓய்வு எடுப்பதற்கான பசுமையான இடங்கள், விளையாட்டு அறை, செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான அறை, ஒன்றுகூடல்களுக்கான பகுதி உள்ளிட்டவை அடங்கும்.

## சூழல் மற்றும் சமுத்திரங்கள் தினத்தை அனுஷ்டித்த DFCC





இலங்கையில் நிலைபேற்றியலில் முன்னோடியான DFCC வங்கி, இரு முக்கியமான முன்னெடுப்புக்களுடன் உலக சுற்றுச்சூழல் தினம் மற்றும் உலக சமுத்திரங்கள் தினம் ஆகிய நிகழ்வுகளை அனுட்டித்துள்ளது. முதலாவதாக வைக்காலில் சதுப்பு நில மறுசீரமைப்புத் திட்டமும், அடுத்ததாக நக்கிள்ஸ் மலைத் தொடரில் ரிவர்ஸ்டனில் வன வளர்ப்புச் செயற்திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மீதான முதலீடுகளில் முன்னோடியாகச் செயற்பட்டு, 1990 களின் ஆரம்பத்தில் சுற்றுச் சூழல் நிலைபேற்றியல் மீதான தனது பயணத்தை ஆரம்பித்த DFCC வங்கியின் நீண்ட கால அர்ப்பணிப்பை இம்முயற்சிகள் பிரதிபலிக்கின்றன.

2030 ஆம் ஆண்டளவில் "பசுமை நிதி வழங்கலுக்கான வங்கியாக" (The Bank for Green Finance) மாறவேண்டும் என்ற குறிக்கோளுடன், DFCC வங்கி தொடர்ந்தும் முன்மாதிரியாகத் திகழ்ந்து வருவதுடன், பசுமை காலநிலை நிதிய அங்கீகாரத்தைப் (Green Climate Fund GCF) பெற்ற இலங்கையின் முதல் நிறுவனமாக மாறியது.

வைக்கால் ஜின் ஓயா முகத்துவாரத்தில் சதுப்புநில மறுசீரமைப்புச் செயற்திட்டமானது, 2024 ஜுன் 7 அன்று முன்னெடுக்கப்பட்டது.

கரையோர சூழல்தொகுதிகளைப்பாதுகாப்பதற்காகதற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற "சமுத்திரங்களுக்கு வாழ்வளிப்போம்" (Life to Marine) என்ற DFCC வங்கியின் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு அங்கமே இந்த முயற்சி.

இந்நிகழ்வின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில், பிரதம நிறைவேற்று அதிகாரி திமால் பெரேரா, பிரதம மனிதவளங்கள் அதிகாரி பதும சுபசிங்க உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகள் பலர் நிகழ்வில் சமூகமளித்திருந்தனர்.

பல்வேறு கிளைகள் மற்றும் பணிப்பிரிவுகளிலிருந்தும் தன்னார்வத் தொண்டர்கள் பலரும் இந்நிகழ்வில் மிகுந்த உற்சாகத்துடன் பங்குபற்றினர்.

தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2024 ஒகஸ்ட் 3 சனிக்கிழமை



# பாரிஸ் ஒலிம்பிக்: குத்து வாங்க முடியாமல் விலகியதால் சர்ச்சை

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் பெண்களுக்கான 66 கிலோ எடைப் பிரிவு குத்துச்சண்டையில், ஆணின் உடல் அம்சங்களைக் கொண்ட அல்ஜீரிய வீராங்கனை இமான் கலிபின் குத்தை தாங்க முடியாமல் இத்தாலி வீராங்கனை அஞ்செலா கரினி 46 விநாடிகளிலேயே போட்டியில் இருந்து விலகியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தனது உயிரை காத்துக்கொள்வதற்கு போட்டியில் இருந்து விலகியதாக கெரினி குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டி ஆரம்பித்து 30 விநாடிகளுக்குள் கரினியின் முகத்தில் விழுந்த குத்தை அடுத்து பயிற்சியாளரிடம் சென்று தனது முகக் கவசத்தை சரி செய்துகொண்டு மீண்டும் போட்டிக்கு வந்த கரினி போட்டியில் நீடிக்க முடியாமல் விலகிக்கொள்ள முடிவு செய்தார்.

நடுவர் கலிபின் கையை உயர்த்தி வெற்றியை அறிவிக்குபோது, 'இது நியாயம் இல்லை' என்று கரினி கூறுவது கெமராவில் பதிவானது.

இது குறித்து புகார் அளித்துள்ள அவர், அல்ஜீரியாவின் இமான் கலிப் ஒரு பெண்ணே இல்லை என்றும், அவர் ஒரு ஆண் என்றும் புகார் கூறியுள்ளார். அவரின் ஒரு குத்தை கூட என்னால் தாங்க முடியவில்லை என்றும் இது ஓர் ஆணின் குத்து போன்று தான் இருந்தது என்றும் அவர் சாடியுள்ளார். ஏற்கனவே 2023 ஆம் ஆண்டு இதே இமான் கலிப் உலக சம்பியன்ஷிப் தொடரிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

பாலினத்தை அறியும் மருத்துவ சோதனையில் ஆணுக்குரிய மரபணு இமான் கலிபிடம் அதிகமாக இருப்பதாக கடந்த 2023 ஆம் ஆண்டு உறுதியானது.

எனினும் சர்வதேச ஒலிம்பிக் குழு இமான் கலிபை சோதனை செய்து அவர் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க அனுமதி அளித்தமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை சாஹிரா வெற்றி

மாளிகைக்காடு குறூப் நிருபர்



இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சம்மேளனம் நடத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுக்கு உட்பட்ட 3ஆம் பிரிவு கடினப் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி அணி, அம்பாறை பதியத்தலாவ தேசிய பாடசாலை அணியுடன் முதலாவது சுற்றின் முதலாவது போட்டியில் வெற்றியீட்டியது. அண்மையில் நடந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பதியத்தலாவ தேசிய பாடசாலை அணி 38.3 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 150 ஓட்டங்களை பெற்றது.

பதிலெடுத்தாடிய கல்முனை ஸாஹிரா அணி 17.2 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 154 ஓட்டங்களை பெற்று 2 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

## சம்பியனானது வெஸ்டன் யுனைட்

மூதூர் தினகரன் நிருபர்



மூதூர் மேற்கு பிராந்திய கால்பந்து கழகத்தால் நடாத்தப்பட்ட கால்பந்து தொடரில்மூதூர் வெஸ்டன் யுனைடட் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

மூதூர் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) மைதானத்தில் அண்மையில் நடந்த தொடரின் இறுதிப் போட்டியில் மூதூர் வெஸ்டன் கிங்ஸ் அணியை எதிர்கொண்ட வெஸ்டன் யுனைடட் அணி 2–1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

## வேஸ்ட் இலவன் சம்பியன்

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்



துறையூர் நட்புறவு சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சாய்ந்தமருது வேஸ்ட் இலவன் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (28) இரவு நடைபெற்ற இச்சுற்றுத் தொடரின் இறுதிப்போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் அணிக்கு எதிராக வேஸ்ட் இலவன் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

இத்தொடரின் மூன்றாமிடத்திற்கான கிண்ணத்தை அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் அணி வென்றதோடு இக் கழகத்தின் வீரர் அஸ்லம் தொடர் நாயகனாகத் தெரிவானார்.

# சர்வதேச செய்திகள்

## ஈரான் ஆதரவு போராளிகள் பதிலடிக்கு தயாராகும் நிலையில் ஹனியே உடல் கட்டாரில் நல்லடக்கம்



ஈரானில் வைத்து இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்டதாக நம்பப்படும் ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியேவின் உடல் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்ட நிலையில், இஸ்ரேலுக்கு எதிரான மோதல் 'புதிய கட்டத்தை' எட்டி இருப்பதாக ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்ல அறிவித்துள்ளார்.

காசாவில் போர் ஒன்பது மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் நிலையில் ஹனியேவின் படுகொலை பிராந்தியத்தில் போர் சூழலை அதிகரித்துள்ளது. இதற்கு எதிராக பழிதீர்ப்பது குறித்து ஈரானும் எச்சரித்துள்ளது.

இந்நிலையில் ஈரான் தலைநகர் டெஹ்ரானில் நேற்றும் முன்தினம் இறுதிக் கிரியை நடைபெற்ற நிலையில் அவரது உடல் அன்று மாலை அவர் வாழ்ந்த கட்டாருக்கு கொண்டுவரப்பட்டது. கட்டார் தலைநகர் டோஹாவின் வடக்கே உள்ள லுஸைலாவில் இமாம் முஹமது பின் அப்துல் வஹ்ஹாப் பள்ளிவாசலில் ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டு அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாஸா தொழுகையில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றிருந்ததோடு, ஹமாஸின் போட்டி அமைப்பான பத்தாவின் பிரதித் தலைவர் மஹ்மூத் அல் அலுல் உட்பட உயர்மட்ட தூதுக் குழு ஒன்றும் இந்த இறுதிக் கிரியையில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காசா போர் ஏற்கனவே பிராந்தியத்தில் பதற்ற சூழலை ஏற்படுத்தி சிரியா, லெபனான், ஈராக் மற்றும் யெமனில் உள்ள ஈரான் ஆதரவு போராட்டக் குழுக்கள் இஸ்ரேலுடனான மோதலில் பங்கேற்றுள்ளன. இந்நிலையில் ஹனியேவின் படுகொலை இந்த நிலைமையை மேலும் மோசமடையச் செய்துள்ளது.



ஹனியேவின் மரணத்திற்காக துருக்கி மற்றும் பாகிஸ்தானில் நேற்று துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டதோடு, 'சீற்றத்திற்கான தினமாக' ஹமாஸ் அறிவித்தது.

ஈரான் அதிகாரிகள் கடந்த புதன்கிழமை ஹிஸ்புல்லா, ஹமாஸ் உட்பட தமது கூட்டணி போராட்டக் குழுக்களின் பிரதிநிதிகளை சந்தித்து அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து பேசி இருப்பதாக லெபனானில் ஹிஸ்புல்ல அமைப்பின் நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

'இரு வாய்ப்புகள் பற்றி இதன்போது பேசப்பட்டன: ஈரான் மற்றும் அதன் ஆதரவு போராட்டக் குழுக்கள் ஒருங்கிணைந்து தாக்குவது அல்லது தனித் தனியே தாக்குவது பற்றியே பேசப்பட்டது' என்று பெயர் குறிப்பிடப்பட்டாத மேற்படி நெருக்கமான வட்டாரம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை இஸ்ரேலிய தாக்குதலில் கொல்லப்பட்ட ஹிஸ்புல்லா அமைப்பின் முன்னணித் தளபதி புவாத் ஷுக்ர்ரின் இறுதிக் கிரியை லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் தெற்கு புறநகரில் இடம்பெற்றது. இதில் கறுப்பு ஆடை அணிந்த ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

இதன்போது கூடியிருந்தவர்கள் முன் தொலைக்காட்சியில் உரையாற்றிய ஹிஸ்புல்லா தலைவர் நஸ்ரல்லா, இஸ்ரேலுக்கு எதிரான மோதல் புதிய கட்டத்தை எட்டி இருப்பதாகவும், எதிரி சிவப்புக் கோட்டை தாண்டி இருப்பதால் அதற்கான பதிலுக்கு காத்திருக்க வேண்டும் என்றும் எச்சரித்தார்.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் இஸ்ரேலின் லெபனான் எல்லையில் ஹஸ்புல்லா மற்றும் இஸ்ரேல் இடையே கிட்டத்தட்ட தினசரி பரஸ்பரம் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. அண்மைய சம்பவங்கள் இந்தப் பதற்றம் முழு அளவில் போர் ஒன்றாக வெடிக்கும் அச்சுறுத்தலை அதிகரிக்கச் செய்துள்ளது.

ஹனியே படுகொலை செய்யப்படுவதற்கு சில மணி நேரத்திற்கு முன்னரே பெய்ரூட்டில் வைத்து சுக்ர் கொல்லப்பட்டார். ஏற்கனவே இந்த ஆண்டு ஆரம்பத்தில் பெய்ரூட்டில் ஹமாஸ் பிரதித் தலைவர் சலேஹ் அல் அரூரி கொல்லப்பட்டார். அதனை இஸ்ரேல் செய்ததாக அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

காசாவில் கடந்த ஜுலையில் நடத்திய தாக்குதல் ஒன்றில் ஹமாஸ் ஆயுதப் பிரிவு தலைவர் முஹமது தெயிப் கொல்லப்பட்டது உறுதியாகி இருப்பதாக இஸ்ரேல் கடந்த வியாழக்கிழமை குறிப்பிட்டது. எனினும் இது குறித்து ஹமாஸ் தரப்பில் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

இந்நிலையில் ஹனியே தங்கியிருந்த டெஹ்ரானில் உள்ள விருந்தினர் விடுதியில் பல வாரங்களுக்கு முன்னரே பொருத்திய வெடிபொருள் வெடித்தே அவர் கொல்லப்பட்டிருப்பதாக நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை, மத்திய கிழக்கு அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

இது பற்றி இஸ்ரேல் இராணுவப் பேச்சாளர் டானி ஹகரியிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, 'லெபனானில் சுக்ர் கொல்லப்பட்ட இரவில் அதனை தவிர மத்திய கிழக்கு முழுவதும் இஸ்ரேலின் எந்த ஒரு வான் தாக்குதலும் இடம்பெறவில்லை' என்றார்.


எவ்வாறாயினும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் நீடிக்கும் நிலையில் கடந்த வியாழக்கிழமை காசா நகரின் ஷுஜைய்யாவில் உள்ள பாடசாலை ஒன்றின் மீது இடம்பெற்ற தாக்குதலில் குறைந்தது 15 பேர் கொல்லப்பட்டு மேலும் 29 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன அவசர சேவை பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேநேரம் தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகரில் குடியிருப்பு கட்டடம் ஒன்றின் மீது நேற்றுக் காலை இடம்பெற்ற வான் தாக்குதலில் நான்கு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு சிறுவர்கள் மற்றும் பெண்கள் உட்பட மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர். மத்திய காசாவின் மகாசி அகதி முகாமில் நேற்று இடம்பெற்ற மற்றொரு வான் தாக்குதலில் மேலும் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

பத்து மாதங்களை நெருங்கும் காசா போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 39,500ஐ தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காசா போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் முக்கிய பங்கு வகித்து வந்த ஹமாஸ் அரசியல் பிரிவுத் தலைவரின் படுகொலை போர் நிறுத்த எதிர்பார்ப்பையும் சிதைத்துள்ளது. ஹனியோவின் படுகொலை காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை அடைவதற்கு உதவாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.

## கலாசார சொத்து ஒப்பந்தத்தில் அமெரிக்கா–இந்தியா கைச்சாத்து




உலக மரபுரிமை குழுவின் 46ஆவது கூட்டத் தொடர் புதுடில்லியில் நடைபெற்ற போது அமெரிக்காவும் இந்தியாவும் கலாசார சொத்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

அமெரிக்காவிடமுள்ள இந்தியாவின் கலாசார சொத்துக்களை திரும்பப் பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் எரிக் கார்செட்டியும் கலாசார அமைச்சின் செயலாளர் கோவிந்த் மோகனும் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்ட நிகழ்வில் மத்திய கலாசார அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் கலந்து கொண்டார்.

இந்த ஒப்பந்தம் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் குறிப்பிடுகையில், 'அமெரிக்காவிலுள்ள எமது விலை மதிக்க முடியாத மரபுரிமை சொத்துக்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவும் கலாசார உறவுகளை விரிவுபடுத்தவும் இந்த ஒப்பந்தம் வகை செய்யும். இரு நாடுகளையும் சேர்ந்த நிபுணர்கள் சுமார் இரு வருடங்கள் மேற்கொண்ட விடாமுயற்சியின் உச்சக்கட்ட பிரதிபலனே இந்த உடன்படிக்கை' என்றுள்ளார்.

## அமெரிக்கா, ரஷ்யா இடையே கைதிகள் பரிமாற்றம்



அமெரிக்காவின் தலைமையில் ரஷ்யாவுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே கடந்த ஒரு வருடமாக நடந்த இரகசிய பேச்சுவார்த்தைகளுக்குப் பின், கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, ஐரோப்பாவின் சிறைகளில் இருந்த எட்டு ரஷ்யக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். பதிலுக்கு ரஷ்யாவும் அமெரிக்க, ஐரோப்பிய கைதிகளை விடுவித்தது.

இந்த கைதிகள் பரிமாற்றத்தை ஒருங்கிணைத்த துருக்கி, இரண்டு குழந்தைகள் உட்பட, 10 கைதிகள் ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டதாகவும், 13 கைதிகள் ஜெர்மனிக்கும் மூவர் அமெரிக்காவுக்கும் விடுதலையாகி சென்றுள்ளனர் என்றும் அறிவித்துள்ளது. போலந்து, சுலோவேனியா, நோர்வே, பெலரஸ் ஆகிய நாடுகளில் சிறையிலிருந்த கைதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர். மொத்தம் 26 கைதிகள் இந்த பரிமாற்றத்தால் விடுதலை ஆகின்றனர். துருக்கியின் தலைநகரான அங்காராவிலிருந்து விமானங்களில் கைதிகள் அவரவர் நாடுகளுக்குச் சென்றனர்.

இராஜதந்திரத்திற்கும் நட்புறவுக்கும் சான்றாக நடவடிக்கை எடுத்துள்ள மேற்கத்திய அரசாங்கங்களை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பாராட்டினார். நட்பு நாடுகளின் ஒத்துழைப்பின்றி இது சாத்தியமாகியிருக்காது என்று அவர் பெருமிதத்துடன் கூறினார்.

மருத்துவ பரிசோதனைகள், ஆவண பரிவர்த்தனைகள் ஆகிய நடைமுறைகள் முடிவுற்றதும், சம்பந்தப்பட்ட கைதிகள் அனுப்பிவைக்கப்பட்டனர் என்று அமெரிக்க தேசிய புலனாய்வு அமைப்பு கூறியது.

மேற்கத்திய நாடுகளில் கைதான ரஷ்யர்களை நாடு திரும்பவைக்கும் எண்ணத்துடன், தமது சிறையில் இருந்த வெளிநாட்டினரை மன்னித்து விடுவிக்கும் முடிவு எடுக்கப்பட்டது என்று ரஷ்யா தெரிவித்தது.

ரஷ்யா விடுவித்தோரில் அமெரிக்க பத்திரிகையாளர் இவான் கெர்ஷ்கோவிச், முன்னாள் இராணுவ வீரர் போல் வீலன், ரஷ்ய அமெரிக்க இரட்டை குடியுரிமை கொண்ட வானொலி செய்தியாளர் அல்சு குர்மஷேவா ஆகியோர் அடங்குவர்.

ஜெர்மனி, ரஷ்யக் கைதியான வடிம் கிராசிகோவ் என்பவரை விடுவித்தது. ரஷ்யாவை விட்டு நாடு கடந்து ஜெர்மனியில் குடியேறிய செச்னியர் ஒருவரைக் கொன்ற குற்றம் நிரூபிக்கப்பட்டு, அவர் தண்டனை அனுபவித்து வந்தார்.

ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் முன்னர் நடந்த பனிப்போர் காலத்துக்குப் பின்னர் நடந்துள்ள பெரிய அளவிலான கைதிகள் பரிமாற்றம் என்று இந்த நடவடிக்கை பார்க்கப்படுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒகஸ்ட் மாதம் 3ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.